நாவாந்துறைப் படிப்பகம்,
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

விலை ரூபா: 15.00

Registered as a News paper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பன்னிரண்டு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 01 புதன்கிழமை (16.07.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 210

SATS TECH



யாழ்.நகரின் முன்னணி
Satellite & Cable TV நிறுவனம்
DIAL 021 222 5908

# மனித உரிமைகள் நிலை குறித்து ஆராய பிரித்தானிய வெளியுறவு அமைச்சர் வருகை

## சகல கட்சிகளையும் சந்திப்பார்

(கொழும்பு)

இலங்கையில் தற்போது நிலவும் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்து ஆராய பிரித்தானியாவின் ஆபிரிக்க , ஆசிய மற்றும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்துக்கான வெளியுறவுத்துறை அமைச்சர் மலக் பிறவுண் நேற்று மூன்று நாள் பயணம் ஒன்றை மேற்கொண்டு கொழும்பு வந்திருந்தார். (12 ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறையில் கிளைமோர் படையினர் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்திலுள்ள மொனறாகல வீதியில் படையினர் மீது தமிழீழ விடுதலைப்புலிகள் நடத்திய கிளைமோர்த் தாக்குதலில் பண்டத் தரப்பைச் சேர்ந்த மூவர் கொல்லப்பட்டுள்ளதுடன் மேலும் ஒருவர் காயமடைந்துள்ளார்.

இது தொடர்பில் அம்பாறை மாவட்ட விடுதலைப்புலிகள் தெரிவித்துள்ளதாவது,

பொத்துவில் - மொனறாகல வீதியிலுள்ள செங்காமம் பகுதியில் நேற்றுக் காலை 7.25 மணியளவில் (12 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அனுமதியை நிறுத்துமாறு மாவை.எம்.பி. ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் பொதுமக்களுக்கு பெரும் அசௌகரியங்களை ஏற்படுத்தும் பயணப் பாதுகாப்பு அனுமதி பெறும் நடைமுறையினை நிறுத்துமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா ஜனாதிபதியிடம் கேட்டுள்ளார்.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராஜா, மகிந்த ராஜபக்ஷவுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளதாவது,

யாழ்.மாவட்டத்திலுள்ள மக்கள் வெளி மாவட்டங்களுக்குச் (12 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் புதிய உறுப்பினர்கள் 13 பேர் தெரிவு

(கொழும்பு)

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் புதிய உறுப்பினர்களாக யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த பல்துறை சார்ந்தவர்கள் 13 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகப் பல்கலைக் கழக மானியங்கள் ஆணைக்குழு வட்டாரத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையில் பதவி வழியாக அங்கம் வகிக்கும் 12 உறுப்பினர்கள் தவிர்ந்த ஏனைய 13 உறுப்பினர்களின் 3 வருட பதவிக் காலம் கடந்த மாதம் 28 ஆம் திகதியுடன் முடிபடைந்தது.

இந் நிலையில் புதிய உறுப்பினர்களைப் பல்கலைக்கழக (12 ஆம் பக்கம் பார்க்க)

## ஓகஸ்ட் முதல் 3 நாள்களும் பொது விடுமுறை தினம்

சார்க் மாநாட்டை முன்னிட்டு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் முதல் 3 நாள்களும் பொது விடுமுறை தினமாக அறிவிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நடைபெறவுள்ள 15-வது சார்க் மாநாட்டின் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காகவே இந்த விசேட விடுமுறை தினம் அறிவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 4 ஆம் திகதி வரை அனைத்துப் பாதுகாப்பு நடைமுறைகளும் அமுலில் இருக்கும் எனப் பாதுகாப்புத் தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ச-5)

## அமெ.,இந்திய அரசு மாற்றங்களுக்காக விடுதலைப்புலிகள் காத்திருக்கின்றார்கள்

### அனிதா பிரதாப் எதிர்வு

(கொழும்பு)

அனைத்துலக அரசியலில் தீர்க்கமான ஞானம் கொண்ட பிரபாகரன் தனது அடுத்த நகர்வினை முன்னெடுப்பதற்கு அமெரிக்க, இந்திய அரசு மாற்றங்களை எதிர்பார்த்து காத்திருக்கின்றார்.

அந்தவகையில் இலங்கை அரசின் தற்போதைய போருக்கு அடுத்த வருடமே புலிகள் பதிலளிப்பார்கள் என்று பிரபல ஊடகவியலாளர் அனிதா பிரதாப் எதிர்வு கூறியுள்ளார்.

இணையத்தளம் ஒன்றுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தமிழீழ தேசியத்தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை 1984 ஆம் ஆண்டு இந்திய சஞ்சிகை ஒன்றுக்காக முதன் முதலாக செவ்வி கண்டவர் அனிதா பிரதாப் என்பது குறிப்பிடத்தக்கது. இவர் ஒரு இந்திய ஊடகவியலாளர் ஆவார். (07 ஆம் பக்கம் பார்க்க)

## பயங்கரவாதத் தடுப்புக்காக வீடியோப் பதிவு செய்யலாம்

### பிரதம நீதியரசர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதத் தடுப்பு மற்றும் குற்றத் தடுப்பு நடவடிக்கைகளுக்காகச் சிவிலியன்களை வீடியோப் பதிவு செய்ய முடியும் எனப் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா தெரிவித்துள்ளார்.

பயங்கரவாதச் செயல்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் எதிர்காலத்திலும் இவ்வாறான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அவர் , (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோரிக்கைகள் நிறைவேறா விட்டால் 3 நாள்கள் தொடர் வேலை நிறுத்தம்

### ஜே.வி.பி. எச்சரிக்கை

(கொழும்பு)

தமது கோரிக்கைகளுக்கு உரிய பதில் கிடைக்காவிட்டால் மூன்று நாள்களுக்குத் தொடர்ச்சியாக வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக எச்சரித்துள்ள அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனத்தின் தலைவரும் ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினருமான லால் காந்த இது குறித்து மக்களை விழிப்புணர்வூட்டும் வேலைத் திட்டம் ஒன்றை முன்னெ (12 ஆம் பக்கம் பார்க்க)

ஆடி மாத மாபெரும் மலிவு விற்பனை

சாறி வகை, ஸ்கேட் அன் பிளவுஸ் வகை, கவுன் வகை மேலும் சிறுவர் சூட் வகை.

இன்னும் பல வகையான புடைவை வகைகளுக்கு நாடுங்கள்.

மலிவு விற்பனை நிலையம் (சேல்ஸ் சென்ரர்)

இலக்கம் 109,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல் அருகாண்மையில்)



# சுதுமலை வடக்கு ஈஞ்சடி
## அருள்மிகு ஸ்ரீ சாமுண்டாம்பிகா சமேத ஸ்ரீ ஞான பைரவ தேவஸ்தான
## அலங்கார (சாந்திக) தேர்த்திருவிழா
## சிறப்பு மலர் 16.07.2008

### ஆலய பிரதம குருவின் ஆசியுரை




வேண்டுவார்க்கு வேண்டிய அருள் பாலித்து சகல மக்களையும் காக்கும் தெய்வமாகிய ஈஞ்சடி ஞான பைரவர் கோயில் வருடாந்த சாந்திக அலங்கார உற்சவம் ஆனி மாதத்தில் தொடங்கி தெட்ஷனாயன ஆரம்பமான ஆடி மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் நடைபெறுவது வழக்கம்.

அன்றைய தினம் அடியார்கள் யாபேரும் வந்து எல்லாம் வல்ல பைரவப் பெருமானை தரிசித்து சகல செல்வங்களும் பெற்று திருவருள் பாலிக்க வேண்டும்.

உலகில் சமாதானம் நிலவ வேண்டி பிரார்த்தித்து ஆசி கூறுகின்றேன்.

**லோகா சமஸ்தா சிகினோ பவந்து**

*ஈஞ்சடி தேவஸ்தான பிரதமகுரு*
*ந.உருத்திரமூர்த்திக்குருக்கள்*



### எல்லாம்வல்ல சுதுமலை ஈஞ்சடியம்பதி ஸ்ரீ ஞானபைரவ சுவாமி திருக்கோவில்



இயற்கை அழகும் அருட்பொலிவும் கூடிய எம்பெருமானுடைய தேர்த் திருவிழாவிலே இந்தப் புண்ணிய நாளிலே அற்புதத் தினத்திலே எல்லா அடியவர்களையும் 'ஊர் கூடி வடம் பிடித்து' என்ற முதுமொழிக்கு இணங்க அனைவரையும் இரதோற்சவம் காண வாரீர் என அழைத்து பணிகின்றேன்.

மேலும் எம்பெருமானுடைய அருட் கடாச்சம் எல்லோருக்கும் கிடைக்க வேண்டி பெரும் துன்பம் நீங்க எம் குல தெய்வமான பைரவரின் பாதங்களை பற்றி நிற்கின்றேன்.

*இங்ஙனம்*
*திரு. வி.கணபதிப்பிள்ளை*
*பரிபாலனசபைத் தலைவர்*

### சுதுமலை ஈஞ்சடி ஞானபைரவர் தேவஸ்தான - இரதோற்சவம்

பழம்பெருமை வாய்ந்த ஈஞ்சடி ஞானபைரவ தேவஸ்தானத்தில் இன்று 16.07.2008 புதன்கிழமை இரதோற்சவம் நடைபெறுகின்றது.

எங்கும் இல்லாதவாறு பைரவர் ஆலயத்தில் தேர்ப்பவனி நடைபெறுவது இவ்வாலயமே முன்னிலை வகிக்கின்றது. பல அதிசயங்களையும் புதினங்களையும் அருள்பாலித்துக் கொண்டிருக்கும் பைரவப் பெருமான் ஆலயத்தின் தேர்ப்பவனியிலே யாபேரும் கலந்து அருளைப் பெறுக. 'தேர் வடம் பிடிக்க விரைந்து வாரீர்'

இவ்வாலயத்தில் திறம்பட தர்மகத்தா சபை இயங்கிக் கொண்டிருக்கிறது. நித்திய, நைமித்திய பூசைகளும் மாதாந்தம் நடைபெறுகின்ற விடேச தினங்களில்-விழாக்களும் திறம்பட விதிமுறையின்படி நடைபெறுகின்றன.

எல்லாம் செவ்வனவே நடைபெற பைரவப்பெருமான் ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

*ச.தம்பித்துரை*
*முன்னாள் பொருளாளர்*

### சுதுமலை ஈஞ்சடி பைரவர் தேவஸ்தான வரலாற்றுச் சிறுகுறிப்பு

பழமை வாய்ந்த ஈஞ்சடி பைரவர் ஆலயம் சுதுமலை வடக்கில் உள்ளது. இதனை சுதுகிரி, சுதுமலையம்பதி என்றும் அழைப்பர். அரசு, ஆல்,வில்வம், வேம்பு, உருத்திராட்சம், மகிழ் போன்ற வான்பயிர்கள் சூழ பைரவர் ஆலயத்தில் இருக்கிறார்.

பைரவ ஆலயங்களில் மிகப் பெரிய ஆலயம் ஈஞ்சடி பைரவர். பைரவரின் பழம் வரலாறு; முற்காலத்தில் ஈச்சம்பற்றைக்குள் நின்ற ஓர் மரத்தடியில் சூல வடிவில் பைரவர் வீற்றிருந்தார்.அப்பொழுது அந்த அயலை சுற்றி பத்து பன்னிரண்டு குடும்பங்கள் இருந்தன. அவர்கள் தங்கள் தொழிலுக்குச் செல்லும்பொழுதும் வணங்கி, வரும்பொழுதும் வணங்கி வந்தனர்.

வருடம் ஒருதரம் சிறப்பாக பொங்கல் எடுத்து கடாய் வெட்டி வணங்குவர். காலப்போக்கில் கட்டங்கள் எழுந்து பைரவப் பெருமானும் ஞானபைரவர் ஆனார். ஐம்பது வருடத்திற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது இன்னும் அழகிய கட்டங்களால் சிறந்து அழகாக வீற்றிருக்கிறார். எல்லோரும் அவரை தேரில் பார்த்து இஷ்ட சித்திகளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டிக்கொள்கின்றோம்.

**ஆலய பரிபாலன சபை**

### தேர்த்திருவிழா நிகழ்ச்சி நிரல்

*காலம்:-* ஆடித்திங்கள் முதலாம் நாள் 16.07.2008
*அபிஷேகம்:-* காலை 8.00 மணிக்கு
*வசந்த மண்டபப் பூசை:-* காலை 10.30 மணிக்கு
*தேர்ப்பவனி:-* 12.00 மணிக்கு
*உற்சவகுரு:-* வேதசிவாகம கிரியாபானு சிவஸ்ரீ ந.உருத்திரமூர்த்திக்குருக்கள் (ஆலய பிரதமகுரு)

தேர் உற்சவத்தின்போது அடியார்கள் வருகை தந்து ஈஞ்சடி ஞானபைரவப் பெருமானின் திருவருளைப் பெற்று உய்யும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**தர்மகர்த்தா சபை;**
**சுதுமலை ஈஞ்சடி ஞானபைரவர் திருக்கோவில்**


அபிராமி சவுண்ட்ஸ்
உரிமையாளர்
மா.சந்திரகுமார்
கல்லூரி வீதி இளவாலை

விழா சிறப்புற வாழ்த்துவோர்

மலரமைப்பு V.கிரிதரன்
மானிப்பாய்

ஸ்ரீ குமரன் ஹாட்வெயர்
Dealers
Rhino Asbesters sheets
Tokyo Cement
Paint & Hard Ware
83,ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்
T.P:-222 2798

ஸ்ரீ சிவகணகுமரன் அரிசி ஆலை
மானிப்பாய் வீதி
இணுவில்

ஸ்ரீ சுபா வெதுப்பகம்
சுதுமலை மத்தி
மானிப்பாய்

COMPCARE GRAPHICS
INUVIL-MANIPAY ROAD
INUVIL

அம்பாள் ஸ்ரோர்ஸ்
அம்பாள் மில்
சுதுமலை அம்மன் கோவிலடி

சுந்தர் கேபிள் TV
சுதுமலை வடக்கு
மானிப்பாய்

PC Power Unit
Navalar Road,
Jaffna

ஈஸ்வர பாமினி நகைப் பூங்கா
ஆலடிச் சந்தி,
மானிப்பாய்

ஈஸ்வரன் வெதுப்பகம்
ஈஞ்சடி சுதுமலை

விநாயகர் நகைப் பூங்கா
கஸ்தூரியார் வீதி
யாழ்ப்பாணம்


C-1324

# இன்று ஒரு தகவல்

## உணவும் பயமும்

ஒரு நாட்டின் மன்னன் கொடுங்கோல் ஆட்சி புரிந்து வந்தான். அவன் நாட்டு மக்களுக்கு நிறைய தொந்தரவுகள் கொடுத்து வந்தான் . ஒருதடவை ஒரு தவறும் செய்யாத இளைஞனைப்பிடித்து சிறையில் அடைத்தான். அந்த இளைஞனின் உறவினர்களெல்லாம் மன்னனிடம் போய்.

அவன் ஒரு தவறும்பண்ணவில்லை. அவனை விடுதலை செய்யுங்கள் என்று கெஞ்சிக் கேட்டுக் கொண்டனர். மன்னன் ஒரு யோசனை செய்தான். அந்த இளைஞனைக் கூட்டிக் கொண்டு வரச்சொன்னான். அவனைக் கொண்டு வந்து மன்னன் முன் நிறுத்தினார்கள்.

"இதோ பார்.... நான் உன்னை விடுதலை செய்வேன் ஆனால் ஒரு நிபந்தனை ! அந்த நிபந்தனையை நீ நிறைவேற்றினால் தான் உனக்கு விடுதலை!" என்றான்.

"சரி! " என்று ஒத்துக்கொண்டான் அவன்.

"உன்னிடம் ஒரு செம்மறி ஆட்டைக் கொடுக்கப்போகிறேன். ஒரு மாதத்திற்கு அதற்குத் தேவையான தீனியையும் தருவேன். ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை எடை போட்டுப் பார்க்கும் போது அதன் எடை கொஞ்சம் கூட கூடியிருக்கக்கூடாது! எடை கூடியிருந்தால் உனக்கு விடு தலை கிடையாது !" என்று நிபந்தனை போட்டான் மன்னன்.

இளைஞனுக்கு ஒன்றும்புரியவில்லை ! குழம்பிக் கொண்டு நின்றான். "சரி! ஒரு நாள் அவகாசம் தரு கிறேன். நன்றாக யோசித்து நாளைக்கு முடிவைச் சொல்!" என்றான் மன்னன் .

இளைஞன் கவலையுடன் வெளியே வந்தான். அங்கே ஒரு பெரியவர் நின்று கொண்டிருந்தார். அவரிடம் விஷயத்தைச் சொன்னான். அந்தப் பெரியவர் அவனுக்கு காதோடு காதாக ஒரு வழி சொல்லிக் கொடுத்தார்.

அதைக் கேட்டதும் அவன் மறுபடியும மன்னன் முன் வந்து நின்றான். "உங்களுடைய நிபந்தனையை ஏற்றுக் கொள்கிறேன்" என்று சொன்னான்.

மன்னன் ஒரு ஆட்டுக்குட்டியையும் ஒரு மாதத்திற்கு அதற்கு வேண்டிய தீவனத்தையும்கொடுக்கும்படி உத்தரவிட்டான். இவன் ஆட்டுக்குட்டியை ஓட்டிக்கொண்டு வந்து ஒருமாதம் தவறாமல் தீவனம் போட்டான். ஒரு மாதம் கழித்து அந்த ஆட்டை அரண்மனைக்கு கொண்டுபோனான். மன்னன் அதைஎடைபோட்டுப்பார்த்தான். அதன் எடை கூட வில்லை! அப்படியே தான் இருந்தது.! நிபந்தனைப்படி உடனே இளைஞனை விடுதலை செய்தான்.

ஆட்டுக்கு எடை கூடாமல்இருப்பதற்காக பெரியவர் சொல்லிக்கொடுத்த யோசனை என்ன தெரியுமா ? அந்த ஆட்டுக்கு எதிரில் அதன் கண்ணில் படுவது மாதிரி ஒரு ஓநாயைக் கட்டிப் போடச் சொன்னார். அவ்வளவுதான்!

ஆட்டுக்கு ஓநாய் பிறவிப்பகை ஆகையால்ஓநாயைப் பார்த்தால் ஆடு நடுங்கும். தினமும் அந்த ஆடு பயந்து கொண்டே தீனி சாப்பிட்டதால் எடைகூடவில்லை! அது தான் ரகசியம் !

இது சின்னப் பிள்ளைகளுக்கான ஒரு கதை. இதிலிருந்து தெரிந்து கொள்ளவேண்டிய உண்மை என்னவெனில் நாமெல்லாம் சாப்பிடும்போது மனமும் உடம்பும் அமைதியாக இருக்கவேண்டும். அப்பொழுதுதான் அது உடம்பில் ஒட்டும்! அவசரத்திலும் பயத்திலும் சாப்பிட்டால் அது ஜீரணமாகாது ! என்பது தான்.

இன்னொரு ராஜா இருந்தான். அவரும்ஒரு இளைஞனை ஜெயிலில்அடைத்துவிட்டார். விடுதலை பண்ண வேண்டுமென்றால் ஒரு நிபந்தனை போட்டார்.

"ஒரு ஆட்டுக்குட்டியை உனக்கு முன்னால் கொண்டு வந்து நிறுத்துவேன். நீ அதனிடம் ஒரு கேள்வி கேட்க வேண்டும் .அதற்கு அது சரியான பதிலைச்சொன்னால் உனக்கு விடுதலை!" என்றார்.

இளைஞன் யோசித்தான் சரியென்று ஒத்துக்கொண்டு அதனைப் பதில்சொல்ல வும் வைத்து விட்டான்.

எப்படித் தெரியுமா?

இவன் மெதுவாக அதனுடைய காதுக்குக் கிட்டப்போய் "ஏப்ரலுக்கு அடுத்தது என்ன மாதம்?" என்று கேட்டான் .

"அது உடனே மே... !" என்று கத்தியது.

இவன் விடுதலையாகி விட்டான்.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# 2004க்குப் பின் 661 தீர்வையற்ற வாகன இறக்குமதிக்கு அரசு அனுமதி

2004ஆம் ஆண்டிலிருந்து இதுவரை ஆயிரத்து 550 மில்லியன் பெறுமதியான 661 தீர்வையற்ற வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான அனுமதிப் பத்திரங்களை இலங்கை அரசாங்கம் வழங்கியிருப்பதாக இலங்கை சுங்கத்திணைக்களம் மற்றும் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. அனைத்து வரிகளும் செலுத்திய பின்னர் இந்த வாகனங்களின் சந்தைப் பெறுமதி 6.2 பில்லியன் ரூபா என அந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

**மக்கள் பிரதிநிதிகளுக்கு (?) அனுமதிப்பத்திரங்கள்**

தீர்வையற்ற வாகன இறக்குமதிப் பத்திரங்களை 225 பாராளுமன்ற உறுப்பினர்களும், பாராளுமன்ற விவகார அமைச்சின் ஊடாகப் பெற்றுக்கொண்டிருப்பதுடன் 386 மாகாணசபை உறுப்பினர்களும் தமக்கான தீர்வையற்ற வாகன இறக்குமதி பத்திரங்களை உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சின் ஊடாகப் பெற்றுக்கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு, கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களைத் தவிர ஏனைய மாகாணசபைகளின் உறுப்பினர்கள் வரிச்சலுகையுடன் சுயவாகன இறக்குமதிக்கான அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொண்டதாக உள்ளூராட்சி மன்ற மற்றும் மாகாணசபைகள் அமைச்சு அறிவித்துள்ளது. எனினும் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் 31 பேருக்கும் இம் முறை தீர்வையற்ற வாகன இறக்க மதிஅனுமதிப்பத்திரம் வழங்கப்படும் என உள்ளூராட்சிமன்ற மற்றும் மாகாண சபைகள் அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் தலா 35ஆயிரம் அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்களையும், மாகாணசபை உறுப்பினர்கள் அனைவரும் தலா 17 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர் பெறுமதியான வாகனங்களையும் இறக்குமதி செய்துள்ளனர். இதில் ஆடம்பர சொகுசு வாகனங்களான பென்ஸ், அவுடி, பி.எம்.டப்ளியு, டொயாட்டா பிராடோ, மிஸ்டிபிஷி மொன்ரோ போன்றன அடங்குகின்றன.

**அனுமதிப்பத்திரங்கள், சந்தையில் விற்பனை**

இதில் எந்தவொரு வாகனத்தினதும் தற்போதைய சாதாரண சந்தைப்பெறுமதி 15 மில்லியன் ரூபா எனவும் அரசாங்கத்தால் வழங்கப்படும் வாகன இறக்குமதி அனுமதிப் பத்திரம் உள்ளூர் சந்தையில் 5 மில்லியன் ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. எனினும் அனுமதிப் பத்திரத்தை விற்பனை செய்வதோ அல்லது உரிமை மாற்றம் செய்வதோ சட்டரீதியற்றது. தீர்வையற்றவாகனத்தை இறக்குமதி செய்வதற்கு உரியவர் வங்கிக் கடனைப் பெற்றுக் கொள்ள முடியும் இதற்கான கொடுப்பனவு அரசாங்கத்தால் வங்கிகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

**ஜனாதிபதியின் சுற்றுநிருபம் என்னாயிற்று?**

எந்தவொரு அமைச்சரும் தலா 7.5 மில்லியன் ரூபாய்கள் சந்தைப் பெறுமதியைக் கொண்ட இரண்டு வாகனங்களை மாத்திரமே பயன்படுத்த முடியுமென 2006ஆம் ஆண்டு ஜனாதிபதி விசேட சுற்றுநிருப மொன்றை வெளியிட்டிருந்தது எனினும் தற்பொழுது அமைச்சர்கள் பயன்படுத்தும் ஒவ்வொரு வாகனத்தின் பெறுமதியும் 14 மில்லியனுக்கும் அதிகமானது எனக் குறிப்பிடப்படுகிறது. (அ-5)

# தொழில்நுட்ப உத்தியோகத்தருக்கான நேர்முகப் பரீட்சை

வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் தொழில் நுட்ப உத்தியோகத்தருக்கான நேர் முகப் பரீட்சை இன்று புதன்கிழமை காலை 9.30 மணிமுதல் மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது. நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோரின் பெயர் விபரம் கீழே தரப்படுகின்றது.

**முற்பகல் 9.30 மணி**

கே.குமார்-திருநெல்வேலி, ரி.ரவீந்திரன்-உரும்பிராய், ரி.ஜெயக்குமார்-கோண்டாவில், எஸ்.சுதர்ஷன்-பருத்தித்துறை, கே.அகிலன்-சங்கானை, எஸ்.ஜெயசொரூபன்-பிறவுண்வீதி, பி.ரமேஷ்-நீர்வேலி, கே.சுரேஷ்- மானிப்பாய், எஸ்.சண்முகநாதன்-சுழிபுரம், பி.பிரதாபன்-சுன்னாகம், பி.தனுஷன்-நாயன்மார்கட்டு, எஸ்.தரணிதரன்-திருநெல்வேலி, பி.பாலகுமார்- நல்லூர், ரி.திலீபன்-உடுவில்கிழக்கு,வி.முரளி-கரவெட்டி, கே.மாதவன்-திருநெல்வேலி.

எஸ்.பிரகாஷ்-ஆணைக்கோட்டை, எஸ்.சுமன்-சாவகச் சேரி, எம்.தர்ஷினி-கொக்குவில், கே.கே.யோகேஸ்வரன்-யாழ்ப்பாணம்,ரி.றீபன்-சுன்னாகம், கே.ஆதித்தன்-சாவகச்சேரி, ரி.யோகசீலன்-சங்கானை, எம்.ராஜ்குமார்-மட்டுவில் வடக்கு, கே.செல்வகுமார்-அல்வாய் வடக்கு, ரி.தவரூபன்-திருநெல்வேலி, கே.சிறிகாந் தன்-வட்டுக்கோட்டை.

**முற்பகல் 10.30**

ரி.நிஷாந்தன்-யாழ்ப்பாணம், ஏ.பிரதாபன்-சுன்னாகம், என்.கஜேந்திரன்-வண்ணார்பண்ணை, எம்.கீதா-ஏ ழாலை, ரி.சரிதா-இணுவில், பி.ஜெகோவன்-உடுவில் கிழக்கு, பி.வினோதராஜா-காரைநகர் , பி.ரஜனிகா-யாழ்ப்பாணம், கே.கஜேந்தினி-மல்லாகம், எஸ்.சுரேன்-ஏழாலை, பி:அனிகரன்-நீர்வேலி, எஸ்.நிஷாந்-ஆனைக்கோட்டை, ரி.பன்னீர் செல்வம்-மானிப்பாய், ஆர்.ஜெயகன்-அரியாலை, என். அகிலன்-மானிப்பாய்.

பி.வரதராஜன்-உரும்பிராய், ரி.யோகசீலன்-சங்கானை, கே.பகீரதன்-கொக்குவில், எஸ்.சுபரூபி-கொக்குவில், என்.பாலகுமார்-சாவகச்சேரி, எஸ்.சுகிதா-இணுவில், எஸ்.சொரூபன்-உடுவில் கிழக்கு, ரி.பிரதீப்-சுழிபுரம், பி.நக்கீரன்-பருத்தித்துறை, ஏ.அரவிந்தன்-கரவெட்டி, ஏ.தர்ஷிகா-கொக்கு வில், ஆர்.கெங்காதரன்-வரணி, கே.குகன்-இணுவில், ஏ.ஜெய தீபன்-மானிப்பாய்.

**மு.ப.11.30**

எஸ்.ராஜரட்ணம்-சண்டிலிப் பாய், ரி.தவரூபன்-திருநெல்வேலி, வி.சசிகரன்-கரவெட்டி, கே.மோகன குமார் தொண்டமானாறு, எம்.ரூபி- சாவகச்சேரி, ஏ.கோபிநாத்-கோப்பாய், பி.ஜெய ரூபன்-காரைநகர் ,சி.ஜெய சுந்த ரேஸ்வரா-கொக்குவில், ஏ.நிஷாந்தன்-அச்சுவேலி, ஏ.திஷாந்தன்-அச்சு வேலி, ரி.சிவநேசன்-புலோலி, எஸ்.செல்வதாஸ்- திருநெல்வேலி, ஆர்.குந்தவை-கொக்குவில், ஏ.ஜனார்த்தனன்-இணுவில், எஸ்.ராஜாராம்- சுழிபுரம், கே.யுதிஸ்டிரன்-உரும்பிராய், எஸ்.சுரேஸ்குமார்-கொழும்புத்துறை, பி.வினோதரன்-வட்டுக்கோட்டை, கே.ரஞ்சித்குமார்-கரவெட்டி, வி.ஜெயந்தினி கொடிகாமம், ஜீ.கோபிநாத்-சங்கானை, எஸ்.பி.அருட்செல்வம்-கொக்குவில், என்.நாகேஸ்வரன்-வல்வெட்டித்துறை, ஜே.ஏ.தேவதாசன் -வல்வெட்டித்துறை, கே.பரமசிவம்-வட்டுக்கோட்டை, என்.ஆனந்த சிவம்-சாவகச்சேரி, வி.ஜே. ஆரிய ரட்ணா-சண்டிலிப்பாய்.


ரி.தாரணி-மீசாலை, என்.குகதாசன்-கரவெட்டி, பி.சுகந்தன்-யாழ்ப்பாணம், பி.ஆரூரன்-அளவெட்டி, கே.ரதீஷன்-அல்வாய், எம்.டில்சான்-தேவகுமார், வி.தனுஜிஜா-திருநெல்வேலி, எம்.துஸ்யந்தி-புத்தூர் கிழக்கு, பி.பத்மகாந்து-கோண்டாவில், கே.ஜெயன். -நீர்வேலி, ஜீ.நிரூஜா-கல்வியங்காடு.

# இராசிபலன்

16.07.2008
(ஆடி 01, புதன்கிழமை)
திரயோதசி முற்பகல் 11.04 மணிவரை
மூலம் பின்னிரவு 1.57 மணிவரை
இராகுகாலம் 12.00-1.30 மணிவரை
சுபநேரம்-04.30-06.00 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | ஆன்றோர் சந்திப்பு, புதிய திட்டமிடல், வீண்பயம், சிறுவியாதி. |
| இடபம் | வீண்தொல்லை, முயற்சி தாமதம், முழங்கால் வலி. |
| மிதுனம் | அபூர்வ சந்திப்பு, திடீர் பயணம், பணவருவாய், குடும்ப மகிழ்ச்சி. |
| கடகம் | சுகவாழ்வு, செய்தொழில் விருத்தி, காரிய நன்மை, சுவாரஸ்யம். |
| சிங்கம் | வியாபார நன்மை, குடும்பக் கவலை, திடீர் நன்மை. |
| கன்னி | கல்வியில் ஆர்வம், அற்பர் உதவி, பயந்த சுபாவம், ரோகநிலை. |
| துலாம் | இனிய நிகழ்வு, கூட்டுமுயற்சி, அந்நியர் சந்திப்பு, வாக்குமேன்மை. |
| விருச்சிகம் | மாதர்நட்பு, பொருள்விரயம், எடுத்தகாரியம் தாமதமாகும். |
| தனுசு | ஆழ்ந்த சிந்தை, ஜனவசியம், புதிய பொருள் சேர்க்கை. |
| மகரம் | பிதாசிந்தை, உணர்ச்சிவசப் படல், சயனசுகக்குறைவு. |
| கும்பம் | தொழில் சிந்தை, பொருள் சேர்க்கை, பெருமையடைதல். |
| மீனம் | உற்சாகம், நல்ல செய்தி, பிறர் உதவி, கடின உழைப்பு. |

வளவன்



யா/பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரியில் அண்மையில் சாரணர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வு இடம்பெற்றது. சின்னம் சூட்டப்பட்ட சாரணர்களுடன் அதிபர், உதவி மாவட்ட ஆணையாளர், சாரணத் தலைவர் ஆகியோர் காணப்படுகின்றனர்.

## வேலைநிறுத்தம் தொடர்பான கலந்துரையாடல்

சர்வதேச மார்க்கசிய குழு, இல 189, வேம்படி வீதியில் அமைந்துள்ள அகவிழி காரியாலயத்தில் நாளை வியாழக்கிழமை பி.ப.3.30 மணிக்கு ஏ.சி.ஜோர்ஜ் தலைமையில், 10.07.2008 ஒருநாள் அடையாள பொது வேலை நிறுத்தம் தொடர்பான கலந்துரையாடலை நடாத்தவுள்ளது.

நிகழ்வில் ஆரம்ப உரையை சொ.சிவபாலன் நிகழ்த்தவுள்ளார். ஆர்வலர் களை சமூகம் தரும்படி கேட்டுக்கொள்கின்றனர். (ஓ)

## வட்டு மத்திய கல்லூரியில் விவசாய ஆய்வுகூடம்

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை மத்திய கல்லூரியில் வடமாகாண கல்வித்திணைக்கள நிதி ஒதுக்கீட்டிக் கீழ் 2.6 மில்லியன் ரூபாசெலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதியவிவசாய ஆய்வுகூடம் அமைக்கும் பணி துரித கதியில் நடைபெற்று வருகின்றது.

இதன் மூலம் மாணவர்களின் ஆய்வு கூட தேவை நிவர்த்தி செய்யப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (அ-27

## யாழ்.மாவட்ட அரிமா கழகம் புற்று நோயாளருக்கு நிதி அன்பளிப்பு

வறிய புற்று நோயாளர் 25 பேருக்கு அரிமா கழகத்தினால் தலா ரூபா 1000/- நிதி உதவி வழங்கப்பட்ட நிகழ்வு கடந்த 11ஆம் திகதி வடமாகாண புற்றுநோய் எயிட்ஸ் நோய் தடுப்பு சங்க பணிமனையில் சங்கத்தின் உப தலைவர் த.கனகசபை தலைமையில் நடை பெற்றது.

இந்நிகழ்வுக்கு யாழ்.பிராந்திய அரிமா கழக பிரதான உறுப்பினர்களாகிய பி.ஆர். ரஞ்சன், பத்மநாதன் ஆகியோர் கலந்து சிறப்பித்து நோயாளருக்கு நிதி வழங்கும் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்கள்.

நிகழ்வில் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் துரைரட்ணம் கைலநாதன், கிருஷ்ணபிள்ளை, சற்குணதேவன், ஞானசேகர வேல் சமூகமளித்து சிறப்பித்தார்கள். இதனைத் தொடர்ந்து நோயாளர்களுக்கு ஒரு தொகுதி சத்துணவு கையளிக்கப்பட்டது. இறுதியாக சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர் க.நடராசா நன்றி உரை நிகழ்த்தினார். (அ)

## வடமராட்சி கல்வி வலய மாதாந்த மீளாய்வுக் கூட்டம்

வடமராட்சி கல்வி வலய உயர்மட்ட கல்விச் செயற்பாடுகள் தொடர்பான மாதாந்த மீளாய்வுக் கூட்டமும் பாடசாலை தொகை மதிப்பு தொடர்பான செயலமர்வு இன்று புதன் கிழமை முதல் வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 4.30 மணி வரை நடைபெறவுள்ளது.

இன்று புதன்கிழமை 1AB, 1C பாடசாலைகளுக்கும், 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை தரம்-2 பாடசாலைகளுக்கும், 21ஆம் திகதி திங்கட்கிழமை தரம்-3 பாடசாலைகளுக்கும் மேற்படிசெயலமர்வுஒழுங்குசெய்யப்பட்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பான மீளாய்வுக் கூட்டத் திற்கு அதிபரும், தொகை மதிப்புக்கு பொறுப்பான ஆசிரியருமான இருவர் தவறாது கலந்து கொள்ளுமாறு வடமராட்சி வலய கல்விப்பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித் துள்ளார். (அ-1)

# கடன் மீளளிப்பு சலுகைக் காலத்தை நீடிக்க மக்கள் வங்கி நடவடிக்கை

## உதவிப் பொது முகாமையாளர் ஆனந்தராசா அறிவிப்பு


(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் வழங்கப்பட்ட கடன்களிற்கான சலுகைக் காலத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக வங்கியின் வடபிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா தெரிவித்தார்.

மக்கள் வங்கியின் 47ஆவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டே இக்கடன் சலுகை வழங்கப்படுவதாக அவர் குறிப்பிட்டார்.

யாழ்.மாவட்டத்தில் மக்கள் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடன்களை தற்போதைய சூழ்நிலையில் குறித்த காலத்திற்குள் திருப்ப செலுத்த முடியாதவர்களிற்கு அதற்கான திருப்பச் செலுத்தும் காலத்தை சலுகை அடிப்படையில் நீடித்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் இம்மாதம் முதல் கிராம மட்ட சேமிப்பு எழுச்சித்திட்டங்களை மேற்கொண்டு மக்கள் வங்கி ஊழியர்கள் கிராமங்கள் தோறும் சென்று சேமிப்புப் பழக்கத்தை ஊக்குவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மக்கள் வங்கியில் வட பிராந்திய உதவிப் பொது முகாமையாளர் ரி.கே.ஆனந்தராசா மேலும் தெரி வித்தார். (அ-5)



தென்புலோலி அருள்மிகு சித்திவிநாயகப் பெருமானின் (1008) சங்காபிஷேகத்தின்போது கும்பம் வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம்.

# நல்லூர் கந்தன் உற்சவம் தொடர்பான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவ ஏற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல் எதிர்வரும் 18ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு மாநகர ஆணையாளர் மு.செ. சரவணபவவின் தலைமையில் அவரது அலுவலக அறையினுள் இடம்பெறவுள்ளது.

இக் கலந்துரையாடலில், மாநகரசபை திணைக்களத் தலைவர்கள், ஆலய அறங்காவலர், இலங்கை மின்சாரசபை. வடபிராந்திய போக்குவரத்துச்சபை. தொண்டர் நிறுவனங் கள், தனியார் வாகன போக்குவரத்துச் சங்கங்கள் ஆகியவற்றின் பொறுப்பாளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். (ஓ)

# கலை இலக்கியப் பெருவிழா

(காரைநகர்)

காரைநகர் உதவி அரசாங்க அதிபர்பிரிவின் கலாசாரப் பேரவை நடாத்தும் கலை இலக்கியப் பெருவிழா 19ஆம் திகதி சனிக் கிழமை காலை 8.30 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகாவித்தியாலய நட ராஜா அரங்கில் காரைநகர் உதவி அரசாங்க அதிபரும். கலாசாரப் பேரவை தலைவருமான இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் போரசிரியர் நா.சண்முகலிங்கன் சிறப்பு விருந்தினர்களாக வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன், வடக்கு கிழக்கு வீடமைப்புத் திட்ட யாழ்.பிரதித்திட்டப் பணிப்பாளர் வே.சாம்பசிவம், வடக்கு-கிழக்கு வீடமைப்புத்திட்ட பிரதித் திட்ட பணிப்பாளர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் கௌரவ விருந்தினராக இ.ச.பேரம்பலம் சக நிறுவன உரிமையாளர் இ.பே.நாகரத்தினம், சீமாட்டி புடைவையகம் உரிமையாளர் த.சற் குணராசா ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் நாதஸ்வர இன்னிசை தேசிய கலை இலக்கியப்போட்டி 2007 பரிசளிப்பு, கலைஞர்கள் கௌரவிப்பு, வழக்காடு மன்றம் என்பன இடம்பெறும். (அ)

# காரை, இருபது-இருபது தொடரில் "ஒளிச்சுடர்" சம்பியனானது

## ஆட்டத் தொடர் நாயகனாக ஆனந்தராஜ்

(காரைநகர்)

காரைநகர் குட்பிரண்ட்ஸ் விளையாட்டுக் கழகம் - காரைநகரிலுள்ள விளையாட்டுக் கழகங்களிடையே கடந்த ஏப்ரல் மாதம் 17ஆம் திகதியிலிருந்து சிவகௌரி விளை யாட்டு மைதானத்தில் நடாத்தி வந்த 20-20மென் பந்தாட்ட நெடுந்தொடரில் - நடைபெற்ற மூன்று இறுதிப்போட்டிகளிலும் 3-0 என்ற ரீதியாக தொடரைக் கைப்பற்றி காரை நகரில் 20-20 முதல் சம்பியன் என்ற பெருமையைப் பெற்றது ஒளிச்சுடர் விளையாட்டுக்கழகம்.

இத்தொடரின் சிறந்த துடுப்பாட்டக் காரருக்கான பரிசை பிரதீபன் பெற்றுக் கொண்டார். சிறந்த பந்து வீச்சாளருக்கான பரிசை கஜேந்திரன் பெற்றுக் கொண்டார்.

இறுதிப்போட்டியின் ஆட்ட நாயகனாக விஜேந்திரன் விருது பெற்றார். ஆட்டத் தொடர் நாயகன் விருதுக்கு பலத்த போட்டி நிலவிய போதும் துடுப்பாட்டத்திலும் பந்து வீச்சிலும் அசத்திய ஆனந்தராஜ் ஆட்டத் தொடர் நாயகன் விருது பெற்றார்.

இரண்டு மாதத்துக்கு மேலாக நடத்தப்பட்ட இத்தொடரில் இரண்டாவது இடத்துக்கான விருது கோவளம் விளையாட்டுக் கழகத்துக்கும்- மூன்றாவது இடத்துக்கான விருது இளஞ்சோலை விளையாட்டுக் கழகத்துக்கும் கிடைத்தது.

பரிசளிப்பு விழாவில் விருந்தினர்களாக விளையாட்டு அலுவலர் கே.சுதாகரன், கிராம அலுவலர் ஆர்.திருப்புகழூர்சிங்கம் மற்றும் ஆசிரியர் எஸ். நவரட்ணம் ஆகியோரோடு சிறப்பு விருந்தினர்களாக அனைத்து விளையாட்டுக்கழகத் தலைவர்களும் பங்கு கொண்டனர். (ஓ)

யாழ்!செய்திகள்

## சனசமூக நிலையங்களுக்கான விசேட கலந்துரையாடல்

உள்ளூராட்சி வாரத்தையொட்டி வலி மேற்கு பிரதேசத்துக்குட்பட்ட சகல சனசமூக நிலைய நிர்வாக உறுப்பினர்களையும் நாளை வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு வலி மேற்கு பிரதேசசபை மண்டபத்துக்கு சமூகம் கொடுக்குமாறு அப்பிரிவு சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் ம.ஞான வேல்ராசா கேட்டுள்ளார்.

## முன்பள்ளி விளையாட்டு விழா

வலி.தென்மேற்கு பிரதேசசபை மானிப்பாய் பட்டின உப் அலுவலக முன்பள்ளி விளையாட்டுவிழா இன்று புதன்கிழமை முற்பகல் 9.30மணிக்கு மானிப்பாய் பிரதேச சபையில் உப அலுவலக பொறுப்பதிகாரி கு.இரத்தினராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலி.தென்மேற்கு பிரதேசசபை செயலாளர் திருமதி பு.சிலலிங்கம், சிறப்பு விருந்தின ராக வலி.தென்மேற்கு பிரதேசசபை முன்னாள் செயலாளர் மே.சாந்தலிங்கம், கௌரவ விருந்தினர்களாக மாவட்ட சனசமூக நிலை அபிவிருத்தி உத்தியோகத்தர் வே.கந்தசாமி, சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி கே.சிவசோதி, சோதி வேம்படி வித்தியாசாலை அதிபர் திருமதி க.ஞானேஸ்வரி, மானிப்பாய் கிழக்கு கிராம அலுவலர் லோ.அருள்ராஜ். முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் சி.குகநேசன், முன்பள்ளி கட்டமைப்புச் செயலாளர் திருமதி ஜோ.கேமநளினி ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (அ)

## அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதாந்த பௌர்ணமித்தினத்தில் நடாத்தி வரும் அகத்தியர் தேவாரத்திரட்டு முற்றோதல், பன்னிரு திருமுறைப் பாராயணம் நாளை வியாழக்கிழமை காலை 8 மணிக்கு காரைநகர் திண்ணபுரம் ஈழத்து சிதம்பர ஸ்ரீ நடராஜப் பெருமான் திருக்கோயிலில் ஆலய அறங்காவலர்களின் அனுசரணையுடன் மன்றத்தலைவர் பண்டிதர் வ.பேரின்பநாயகம் தலைமையில் நடைபெறவுள்ளது.

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

ஐ.பி.எம்.எஸ்.நிறுவனத்தின் கல்வியாண்டு 2007/2008 கற்கைநெறிகளைபூர்த்திசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை வியாழக்கிழமை காலை 9.30 மணிமுதல் IIS City Campus மண்டபத்தில் நிறுவன இயக்குநர் திருமதி ஜெயசோதி விக்னேஷ் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவிற்கு பிரதம விருந்தினராக IIS Group ன் பிரதம நிறைவேற்று அதிகாரியும் IBMS நிறுவனத்தின் தலைவருமாகிய கே.விக்னேஸ் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

இன்றைய சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் ஆண்டுதோறும் வழங்கப்படுவது போல்சிறப்புச்சித்தியெய்திய மாணவர் களுக்கு சிறப்பு விருதுகளும் வழங் கப்படவுள் ளது.

சிறப்புவிருதுபெறவிருக்கும் மாணவர்கள். செல்வி ஜீன் ஜீவரணட்னம், செல்வி பத்மராஜி கிறிஸ்தோப்பிள்ளை. (அ)

## பருத்தித்துறை மக்கள் வங்கியின் ஓவியக் கண்காட்சி

மக்கள் வங்கியின் 47 ஆவது ஆண்டு கொண்டாட்ட வரிசையில் பருத்தித்துறை மக்கள் வங்கிக் கிளையின் குளிரூட்டப்பட்ட மண்டபத்தில் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 9 மணி முதல் மாலை 4 மணி வரை ஸ்ரீசாரதா சேவாச்சிரம அனுசரணையில் சுவாமி விவேகானந்தர் வாழ்வினைச் சித் தரிக்கும் ஓவியங்கள், படங்கள், தத்துவ முத்துக்கள் அடங்கிய அற்புதமான ஓவியக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

சுவாமி சித்ரூபானந்தாவும் இந்நிகழ்வில் கலந்து ஆசியுரைவழங்குவார். (ஓ-19)

## வினைத்திறமை காண் தடைப்பரீட்சை

2005ஆம் ஆண்டு பட்டதாரி வேலைத் திடடத்தின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான 1ஆவது வினைத் திறமை காண் தடைப்பரீட்சை வடக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக் குழுவினால் செப்டம்பர் மாதத்தில் நடாத்த நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளது.

தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் விண்ணப்பப்படிவங்களைப் பெற்று எதிர்வரும் 31ஆம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை செயலாளர் மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு, வடக்கு மாகாணம் எனும் விலாசத்திற்கு அனுப்பிவைக்குமாறும் இது பற்றிய அறிவித்தல் ஒவ்வொரு திணைக் களத் தலைவர்களுக்கும் அனுப்பி வைக்கப் பட்டுள்ளதாகவும் வடக்கு மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு செயலாளர் சி.திருவாகரன் அறிவித்துள்ளார். (ஓ)

# ரோயல் கல்லூரி, கொழும்பு -07
# Royal College, Colombo - 07

க.பொ.த. (உயர்தர) முன்னோடிப் பரீட்சை
Pilot Examination

ஆனி 2008
June 2008

வகுப்பு 13
Grade 13

இணைந்த கணிதம் – II
Combined Mathematics- II


3 மணித்தியாலங்கள்
3 Hours

**ஆறு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்குக.**

01) (a) நேரம் $t=0$ இல், புள்ளி O இல் இருந்து ஒரு துணிக்கை P ஆனது, நிலைக்குத்தாக மேல் நோக்கி u வேகத்துடன், ஈர்ப்பின் கீழ் எறியப்படுகின்றது. நேரம் t இன் பின்னர் இன்னோர் துணிக்கை Q ஆனது புள்ளி O இல் இருந்து நிலைக்குத்தாக மேல்நோக்கி 2u வேகத்துடன் ஈர்ப்பின் கீழ் எறியப்படுகின்றது. Q சார்பாக P இன் இயக்கத்திற்கான வேக –நேர வரைபை வரைக. நேரம் $\frac{t(4u+gt)}{2(u+gt)}$ இல் இரு துணிக்கைகளும் மோதும் எனக்காட்டுக. 1

(b) நண்பகல் 12.00 மணிக்கு ஒரு கப்பல் A ஆனது உற்பத்தி O இன் ஊடாக வேகம் $\underline{U}=2\underline{i}-j$ உடன் செல்கின்றது. அக் கணத்தில் $50\underline{i}$ தானக் காவியுடைய புள்ளியினூடாக இன்னோா கப்பல் B ஆனது வேகம் $\underline{V}=2\underline{i}+2j$ உடன் செல்கின்றது. இங்கு $\underline{i},j$ என்பன முறையே கிழக்கு, வடக்கு நோக்கிய திசைகளிலுள்ள அலகுக் காவிகளாகும். நேரம் t இன் பின் A சார்பாக B இன் தானக் காவியையும், வேகத்தையும் காண்க. இங்கு நேரத்தின் அலகு h உம் தூரத்தின் அலகு km உம் ஆகும். இதில் இருந்தோ அல்லது வேறுமுறையாலோ அவ்விரு கப்பல்களுக்கும் இடையேயுள்ள மிகக் கிட்டிய தூரம் 30km எனக் காட்டி, அப்போது நேரத்தையும், ஒவ்வொரு கப்பல்களினதும் தானக் காவியையும் காண்க.

02) (a)




m திணிவுள்ள ஒப்பான கனக்குற்றியும், m திணிவும் ∝ கோணமும் உள்ள ஒப்பமான ஆப்பும், ஒப்பமான கிடைமேசை மேல் வைக்கப்பட்டுள்ளன. ஒருமுனை A, கனக்குற்றியில் தொடுக்கப்பட்டுள்ள மெல்லிய நீளா இழையானது, ஆப்பின் உச்சியில் உள்ள ஒப்பான கம்பி C இன்மேலாகச் சென்று, மறுமுனை B இல் m திணிவைக் காவுகின்றது. இழையின் பாகம் AC கிடையாக உள்ளது. இழை இறுக்கமாக இருக்க தொகுதி ஓய்வில் இருந்து விடுவிக்கப்படுகின்றது. $\alpha<\cos^{-1}(2-\sqrt{3})$ எனின்,

ஆப்பினால் துணிக்கை மீது கொடுக்கப்படும் தாக்கம் $\left(\frac{\cos^2\alpha-4\cos\alpha+1}{\cos^2\alpha+2\cos\alpha-5}\right)mg$ எனக் காட்டுக.

(b) ஒரு துணக்கையானது, தனது திணிவின் λ மடங்கு திணிவுடையதும், தனது வேகத்தின் $\frac{1}{n}$ மடங்கு வேகத்துடன் அதே திசையில் இயங்கும் இன்னோர் துணிகையை நேரடியாக மோதுகின்றது. மோதலினால் முதலாம் துணிக்கை ஓய்வடையும் எனின் துணிக்கைகளுக்கு இடையேயான மீளமைவுக் குணகம் $\frac{\lambda+n}{\lambda(n-1)}$ எனவும் $\lambda>\frac{n}{n-2}$ எனவும் காட்டுக.

03) (a) ஒரு துணிக்கையானது கிடைத்தரையிலுள்ள புள்ளி A இல் இருந்து v கதியுடன் கிடையுடன் θ கோணத்தில் ஈர்ப்பின் கீழ் மேல் நோக்கி எறியப்படுகின்றது. அது A இல் இருந்து 'a' தூரத்தில் உள்ள புள்ளியில் தரையை அடிக்கிறது. a ஐ v, g, θ இன் சார்பில் கண்டு துணிக்கை அடையும் அதியுயர் உயரம் $h$ இற்கான ஒரு கோவையைப் பெறுக. இதில் இருந்து $ga^2=8n(v^2-2gh)$ எனக் காட்டுக v, a மாறாதிருக்க 0 மாறும் எனின் $h$ இற்கு இரு இயல்தகு பெறுமானங்கள் உண்டெனக் காட்டி, அவற்றின் கூட் டுத்தொகை $a$ இல் தங்கவில்லை எனக் காட்டுக.

(b) 500kg திணிவுள்ள ஒரு காரானது $\sin^{-1}\left(\frac{1}{7}\right)$ சரிவுள்ள பாதையில், மேல் நோக்கி $10ms^{-1}$ என்னும் மாறாக் கதியில் இயங்குகின்றது. காரின் இயக்கத்திற்கான உராய்வுத் தடையானது 800N ஆகும் கார் எஞ்சின் உஞற்றும் வலுவைக் காண்க. கார் எஞ்சினின் வலு சடுதியாக 2 kw அதிகரிக்கப்படின் அதன் ஆர்முடுகலைக் காண்க.


04) a) ஒரு துணிக்கையானது a ஆரையுள்ள ஒப்பான பொட்கோளத்தின் உட்புறத்தில், அதிதாழ்புள்ளி A இல் இருந்து $2\sqrt{ag}$ என்னும் ஆரம்பக் கதியுடன் கிடையாக எறியப்படுகின்றது அது A இல் இருந்து $\frac{5a}{3}$ உயரத்தில் கோளப்பரப்பைவிட்டு விலகும் எனக் காட்டுக. துணிக்கை அடையும் அதியுயர் உயரம் A இல் இருந்து $\frac{50a}{27}$ எனக் காட்டுக.

(b) a இயற்கை நீளமும், மீள் தன்மையும் உடைய ஓர் மெல்லிய இழையின் ஒரு முனை, புள்ளி O இற்கு இணைக்கப்பட்டுள்ளது. இழையின் மறும்முனையில் m திணிவு இணைக்கப்பட்டுள்ளது. திணிவானது O இல் பிடிக்கப்பட்டு ஈர்ப்பின் கீழ் விடுக்கப்படுகின்றது. தொடரும் இயக்கத்தில் திணவானது O இல் இருந்து 4a தூரத்திலுள்ள புள்ளி E ஐ அடைந்து, பின் நிலைக்குத்தாக மேல் நோக்கி இயங்கத் தொடங்குகின்றது.

i) இழையின் மீள் தன்மைமட்டு $\frac{8mg}{9}$ எனவும்,
ii) துணிக்கையூானது O இல் இருந்து E ஐ அடைய எடுத்த நேரம்.

$$\sqrt{\frac{2a}{g}}+\frac{3}{2}\sqrt{\frac{a}{2g}}\left\{\pi-\tan^{-1}\left(\frac{4}{3}\right)\right\}$$ எனவும் காட்டுக.

05) (a)




ஆறு இலேசான கோல்களாலான சட்டப்படலைப் படம் காட்டுகின்றது. அது நிலைக்குத்தான் சுவரில் AB நிலைக்குத்தாக இருக்குமாறு A, B இல் ஒப்பமாகப் பிணைக்கப்பட்டுள்ளன. D இல் 400N சுமை ஏற்றப்பட் டுள்ளது. AE=ED=AC=CD=10m, EC=5m, BC=15m, AD கிடையாக உள்ளது. தகைப்பு வரிப்படத்தை வரைந்து, ஒவ்வோர் கோலிலுமுள்ள தகைப்புக்களைக் கண்டு ; இழுவை உதைப்பு என வேறுபீடுத்துக.

(b) W நிறையும் 2a நீளமும் உள்ள ஆறு சீரான கோல்கள் AB, BC, CD, DE, EF, FA என்பன அவற்றின் முனைகளில் ஒப்பமாக மூடப்பட்டு A இல் இருந்து தொங்கவிடப்பட்டுள்ளது. AC, CE, AE என்னும் இலேசான கோல்களி னால் ABCDEF ஆனது ஒழுங்கான அறுகோணி வடிவில் பேணப்படுகின்றது. மூட்டுக்கள் D, B இல் உள்ள தாக்கங்களையும் கோல்கள் AC, CE இல் உள்ள தகைப்புக் களையும் காண்க.

06) (a) W நிறையுடைய ஓர் சீரான ஏணி AB ஆனது கரடான நிலைக்குத்துச் சுவருக்கெதிரேயும், கரடான கிடைத்தரைக்கெதிரேயும் சமநிலையில் உள்ளது. A இலும் B இலும் உராய்வுக் குணகங்கள் $\mu(<\tan\alpha)$ ஆகும். மெல்லிய நீளா இழையின் ஒருமுனை AB இன் நடுப்புள்ளிக்கும், மறுமுனை புள்ளி C இற்கும் இணைக்கப்பட்டு, இழை இறுக்கமாக உள்ளது. புள்ளி C ஆனது A இற்கு நிலைக்குத்தாக கீழே உள்ள அதேவேளை BC கிடையாகவும், தளம் ABC நிலைக்குத்தாகவும் உள்ளது. ஏணி மட்டுமட்டாக வழுக்கும் தறுவாயில் இருப்பின்,

இழையில் இழுவை $\frac{W}{2\mu}\{(1-\mu^2)\sin\alpha-2\mu\cos\alpha\}$ எனக்காட்டுக.

இங்கு ஏணி நிலைக்குத்துடன் அமைக்கும் கோணம் ∝ ஆகும்.

b) ABCDEF என்பது a பக்கமுள்ள ஓர் ஒழுங்கான அறு கோணியாகும். AB, BC, CD, DE, EF, FA வழியே. எழுத்துக்களின் ஒழுங்கு குறிக்கும திசையில் முறையே. P, Q, R, S, T, U பருமனுள்ள விசைகள் தாக்குகின்றன. P-S= R-U= T-Q எனின் தொகுதியானது. $(P+Q+R+S+T+U)\frac{\sqrt{3}a}{a}$ பருமனுள்ள இணைக்கு சமானம் எனக் காட்டுக.

07) a ஆரையுள்ள சீரான், திண்ம அரைக் கோளத்தின் புவியீர்ப்பு மையத்தைக் காண்க. ஒரு விளையாட்டுப் பொருளானது a ஆரையும், $p$ அடர்த்தியும் உடைய ஒரு சீரான திண்ம அரைக் கோளத்தின் தட்டையான பகுதியையும்; a ஆரையும், 2a உயரமும், kp அடர்த்தியும் உடைய சீரான திண்ம உருளையின் தட்டையான பகுதியையும் சேர்த்து ஒட்டி உருவாக்கப் பட்டுள்ளது. இப் பொருளானது அதன் கோளப்பரப்பு ஒரு ஒப்பமான கிடைத்தரையைத் தொடுமாறு வைக்கப்பட்ட போது, அதன் சமச்சீர் அச்சு நிலைக்குத்தாகுமாறு ஓய் வடைந்தது எனின் $k<\frac{1}{8}$ எனக்காட்டுக.

இப்போது கோளப்பரப்பரப்பானது, கிடையுடன் ∝ சாய்வில் உள்ள கரடான தளப்பரப்பில் வைக்கப்பட்டது. உடலானது சமநிலையில் இருப்பின் $\sin\alpha=\frac{1}{8}$ எனக் காட்டுக. சமச்சீர் அச்சிற்கும், நிலைக் குத்துக்கோட்டுக்கும் இடைப்பட்ட கோணம் $B$ எனின், $B$ இற்கு ஒரு கூற்றைக் காண்க.

08) (a) மாதிரி வெளி S இல் A, B என்பன இரு நிகழ்ச்சிகளாகும்.

i) P(A/B) ஐ வரையறுக்க.
$P(A^1/B)=1-P(A/B)$ எனக் காட்டுக்க.

ii) A, B என்பன தம்முட்புற நீங்கும் நிகழ்ச்சிகளும், $P(A\cup B)\neq 0$ எனின்,
$P(A/A\cup B)=\frac{P(A)}{P(A)+P(B)}$ எனக் காட்டுக.

iii) A, B சாரா நிகழ்ச்சிகள் எனின் $A^1, B^1$ சாரா நிகழ்ச்சிகள் எனக் காட்டுக.

(b) $(B_1, B_2, B_3, \ldots B_n)$ என்பன மாதிரி வெளி S இன் நிகழ்ச்சிப் பிரிப்புக்களும், A என்பது யாது மொரு நிகழ்ச்சியும் எனின்,

i) $P(A)=\sum_{(i=1)}^{n}P(A/B_1).P(B_1)$ எனவும்,

ii) $P(B_2/A)=\sum_{(i=1)}^{n}\frac{P(A/B_2).P(B_2)}{P(A/B_1).P(B_1)}$ எனவும்,

iii) ஒரு பாடசாலையில் 60% மாணவர்(ஆண்)களாவர். மாணவர்(ஆண்)களில் 5% உம், மாணவிகளில் 3% உம், நுண்ணறிவுப் பரீட்சையில் 125 புள்ளிகளுக்கு மேல் பெற்றுள்ளனர். எழுமாற்றாகத் தெரியப்படும் ஒரு மாணவர் நுண்ணறிவுப் பரீட்சையில் 125 புள்ளிகளுக்கு மேல் பெற்றிருந்தால் அவர் பெண்ணாக இருப்பதற்குரிய நிகழ்தகவைக் காண்க.

09) (a) $x_1, x_2, x_3, \ldots\ldots, x_n$ என்னும் n நோக்கல்களின் இடை x ஆகும். இந் நோக்கல்களின் நியமவிலகல் $\sqrt{\frac{\sum x_1^2}{n}-x^2}$ எனக் காட்டுக.

ii) ஒரு தொகுதி எண்களின் இடை 23 உம் நியமவிலகல் 7 உம் ஆகும். இத் தொகுதியின் ஒவ்வோர் எண்ணும் 23 ஆல் குறைக்கப்பட்டு 7 ஆல் வகுக்கப்படுகிறது. புதிய தொகுதியின் இடையையும் , நியமவிலகலையும் காண்க.

(b) X, Y என்னும் இரு பங்குகளின் விலை (ரூபா) பின்வருமாறு

X: 55,54,52,53,55,58,52,50

Y: 108,107,105,106,107,106,104,103

i) ஒவ்வோர் பங்கினதும் இடை மாறாற்றிறன் என்பவற்றைக் காண்க.

ii) ஒவ்வோர் பங்கினதும் மாறற் குணகத்தைக் காண்க.

iii) உமது அபிப்பிராயப்படி, எந்தப் பங்கு நிலையான பெறுமதியைக் கொண்டுள்ளதாகத் தோற்றுகிறது.

# தரம் -5 புலமைப்பரிசில்

## பயிற்சி வினாத்தாள் 9

பகுதி -I
நேரம் - 45 நிமிடம்

வலம்புரி ஆசிரியர் குழு

எல்லா வினாக்களுக்கும் விடை யளிக்க

☼ **இல 1-6 வரையிலான வினாக்களுக்குப் பொருத்தமான சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

1ம் ,2ம் வினாக்களில் தரப்பட்டுள்ள சொற்களுக்கு மிகப் பொருத்தமான உரு எது?

1. உலோகம், ஆயுதம், கூர்மை

(.........................................)



2. நீந்தக் கூடியது, நடக்கக்கூடியது, முட்டையிடக் கூடியது.

(.........................................)



3. பின்வரும் அடைப்புக்களில் உள்ள வாக்கியங்களை வாசியுங்கள். நிகழ்ச்சிகள் நடக்கிற வரிசைக்கிரமத்தைக் காட்டுகின்ற விடை எது?

1. அம்மாவின் சொல்லைத் தட்டாமல் பாண்துண்டொன்றைச் சாப்பிட எடுத்தேன்.
2. வசு வண்டி வரும் சத்தம் கேட்டு பாதைக்கு ஓடினேன்.
3. காலையிலே அக்கா என்னை எழுப்பினார்.
4. 'தம்பி,அவசரமாகச் சாப்பிடுங்கள் போக நேரமாகிவிட்டது' என்று அக்கா சொன்னார்.
5. நான் குளிரில் நடுங்கியபடி முகம் கழுவினேன்.

(1) 3, 4, 5, 1, 2 (2) 3, 5, 1, 4, 2 (3) 3, 5,1, 2, 4,

☼ **கீழ் வரும் கூற்றுகள் பிழையானவை - அவை பிழையாவதற்குரிய காரணத்தை தரப்பட்ட விடைகளிலிருந்து தெரிவு செய்க.**

4. 'நான் பிறந்த அன்று என் தம்பி விளையாடிக் கொண்டிருந்த சமயம் தடுக்கி விழுந்து மண்டை பிளந்தது' என்று அம்மா கூறினாள்
   1. நானும் தம்பியும் ஒன்றாகவே பிறந்தோம்.
   2. நான் பிறந்த பின்னரே என் தம்பி பிறந்தான்.
   3. நான் பிறந்த நேரம் தம்பியால் ஓடிவிளையாட முடியாது.
5. நரியின் முதுகின் மீது பாய்ந்து ஏறிய சேவல் 'கொக்கரக்கோ' என்று கூவியது.
   1. சேவலுக்கு நரியின் முதுகின் மீது பாய முடியாது.
   2. சேவல் கொக்கரக்கோ என்று கூவாது
   3. சேவல் நரிக்கு இரையாகக் கூடியது.
6. தன்னைப் பராமரித்த பாகனைக் குதிரை தன் கொம்பினால் குத்திக் கொன்றது.
   1. குதிரைக்குக் கொம்புகள் கிடையாது
   2. குதிரை மனிதர்களைக் கொல்வதில்லை.
   3. குதிரை பாகனால் பராமரிக்கப்படுவதில்லை.

☼ **கீழே தரப்பட்டுள்ள சொற்கூட்டங்களில் இரண்டு சொற்கள் ஒரே கருத்தையும், இரண்டு சொற்கள் எதிர்க்கருத்தையும் கொண்டன. தனித்து நிற்கும் சொல்லைத் தெரிவு செய்து அதனை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**


7. வினா, பிரச்சனை, கட்டுரை, தீர்வு, கேள்வி (...........................)
8. உருவம், விபரம், விளக்கம், பருவம், அருவம் (...........................)
9. கணவன், கைம்பெண், விதவை, வாலிபன், வயோதிபன் (...........................)
10. உண் , எழு, சாப்பாடு, குடி , நில், (...........................)

☼ **இங்குள்ள கணிதச் செய்கையின் ஆங்கில எழுத்துகளால் தரப்பட்டுள்ள எண்கள் 0-9 வரையிலான இலக்கங்களைக் கொண்டவை. கணிதச் செய்கையைப் புரிந்து கொண்டு அவ் ஆங்கில எழுத்துகளின் பெறுமதியைப் புள்ளிக்கேட்டில் எழுதுக.**

```
 ABC       ABC
 CAB       CAB
 ---       ---
 653       171
```

11. Aயின் பெறுமதி.............. 12. Bயின் பெறுமதி............. 13.Cயின் பெறுமதி......

☼ **14ஆம் 15ஆம் வினாக்களில் உள்ள கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்துக்கு வரவேண்டிய எண்ணை அருகேயிருக்கும் அடைப்புக்குள் எழுதுக.**

14. 


15. 97 95 91 85 77 (................)

☼ **பின்வரும் சம்பவங்களுக்கு மிகப் பொருத்தமான சொற்றொடரைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

16. தமக்குப் பிரயோசனமான விடயமொன்றை அழித்து விடுதல்
   1.புதுவீட்டை உடைத்துக் கட்டுதல் 2.நிழல் கொடுத்த மரத்தை வெட்டுதல்
17. மிகுந்த கவலையில் இருக்கும் ஒருவருக்கு மீண்டும் ஒரு துன்பம் வருதல்
   1.கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததைப் போல
   2.மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல.
18. கஷ்டப்பட்டாவது செய்ய முடியாத காரியம்
   1.கல்லில் நார் உரிப்பது 2.எரியும் நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது


☼ **பின்வரும் வினாக்களில் உள்ள கூற்றுகள் எப்போதும் உண்மையாக இருக்கும் எனில் (✓) அடையாளத்தையும் ,சிலவேளைகளில் மட்டும் உண்மை எனின் ( X)எனவும் அடைப்புக்குள் அடையாளமிடுக.**


19. அம்மா என்பவர் ஒரு பெண்ணாவார். (....................)
20. ஆமை நிலத்தில் வாழும் (....................)
21. கடிகாரங்களில் செக்கன் முள்ளானது ஒரு நிமிடத்தில் 60 முறை அசைவைக் காட்டும் (....................)
22. பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளைகளை விட அறிவில் கூடியவர்கள் (....................)


☼ **இல 23-25 வரையிலான வினாக்களுக்குச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

23. ஒவ்வொரு திங்கட்கிழமையும் காலைக்கூட்டத்தில் மாணவ தலைவர் ஒருவர் உரையாற்ற வேண்டும். சென்ற திங்கட்கிழமை ஜூன்மாதம் 26ஆம் திகதி எனின் இன்னொரு மாணவ தலைவர் உரையாற்ற வேண்டிய தினம் யாது?
   1.ஜூலை 03ஆம் திகதி 2.ஜூலை 4ஆம் திகதி 3.ஜூலை 5ஆம் திகதி
24. வாங்கு ஒன்றில் இருவர் அமர்ந்துள்ளனர். அதில் ஒருவர் மற்றவரின் தந்தையாவார் மற்றவர் தந்தையின் புதல்வர் அல்ல எனின் மற்றவர் தந்தைக்கு என்ன உறவு?
   1. மைத்துனன் 2. மகள் 3. மனைவி
25. எனது பெரிய தம்பி என்னை விட 6 வருடங்கள் இளையவன் என் சின்னத்தம்பி பெரிய தம்பியை விட 3 வருடங்கள் இளையவன் என் மாமாவின் மகன் சின்னத்தம்பியை விட 12வருடங்கள் மூத்தவன் மாமாவின் மகனின் வயது 15 எனின் எனதும் பெரிய தம்பியினதும் வயதுகள் முறையே
   1. 10 உம் 4 உம் 2. 11 உம்5 உம் 3. 12 உம் 6 உம்

☼ **26-28 வரையிலான வினாக்களில் முதலில் தரப்பட்டுள்ள உருவில் உள்ள வெற்றிடத்துக்குப் பொருத்தமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

26. 


27. 


28. 



☼ **29-30ஆம் வினாக்களில் திருத்தமான கருத்தைத் தரும் வாக்கியத்தைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

29. 1) அதிக நறுமணமுள்ளது ஒரு மல்லிகை மலராகும்.
   2) மல்லிகை அதிக நறுமணமுள்ள ஒரு மலராகும்.
   3) ஒரு மலர் அதிக நறுமணமுள்ள மல்லிகையாகும்.
30. 1) எமக்குப் பலனளிக்கும் நாங்கள் இன்று கற்கும் நாளைய கல்வியே.
   2) நாளை நாங்கள் கற்கும் கல்வியே இன்று எமக்குப் பலனளிக்கும்.
   3) இன்று நாங்கள் கற்கும் கல்வியே நாளை எமக்குப் பலனளிக்கும்.

☼ **பின்வரும் வினாக்களில் மிகச் சரியான ஒழுங்கு முறை அமைந்துள்ள விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க்கோடிடுக.**


31. பக்கங்களின் அடிப்படையில் அமைந்த ஒழுங்கு
   1) முக்கோணம் ,சதுரம், ஐங்கோணி ,அறுகோணி
   2) வட்டம் , முக்கோணம், செவ்வகம், சதுரம்
   3) சதுரம் முக்கோணம் ஐங்கோணி , செவ்வகம்.
32. தமிழ் வரிசைப்படி பெயர்கள் அமைந்துள்ள ஒழுங்கு
   1) இஷாரா, அமலா, ஈஸ்வரி, உதயா
   2) அமலா, இஷாரா, ஈஸ்வரி, உதயா
   3) உதயா, ஈஸ்வரி, அமலா, இஷார
33. மேற்பரப்புகளின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லும் வகையில் அமைந்துள்ள ஒழுங்கு
   1) கோளம், உருளை, சதுரமுகி, நான்முகி
   2) நான்முகி, கோளம், சதுரமுகி, உருளை
   3) கோளம், உருளை, நான்முகி, சதுரமுகி


☼ **பின்வரும் உருவை அவதானித்து 34-36 வரையிலான வினாக்களுக்குரிய விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**





34. இங்கு கூடுதலாக இடம் பெற்றிருப்பது எது?
   1.தமிழ் எழுத்துகள் 2.ஆங்கில எழுத்துகள் 3.எண்கள்
35. இங்கு அதிக ஆங்கில எழுத்துகள் காணப்படுவது எவ் உருவில்?
   1.சதுரத்திற்குள் 2.வட்டத்துக்குள் 3.செவ்வகத்துக்குள்
36. இங்கு மூன்று உருக்களுக்கும் பொதுவான எண்ணும் ஆங்கில எழுத்தும் எது?
   1. 5,U 2. 4,E 3. 5,E
37. இங்கு இடம்பெற்றுள்ள ஆங்கில எழுத்துக்கள் நெடுங்கணக்கில் அமைந்துள்ள ஒழுங்கு எது?
   1.ADEHIMNPUYZ 2.ADEIHNMPUYZ 3.ADEMNPUZHIY

☼ **முதலில் தரப்பட்ட உருவுக்கு மிகவும் பொருத்தமான தொடர்புடைய உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

38 


39. 


40. 

# நோத்முதல் கோபல்லவா வரை 38



### சமவாய சம்பந்த மாநாடு

திருகோணமலையில் இருந்து தமது சுற்று லாத்தில் புறப்பட்ட ஆள்பதி பிறவுண்றிக் கந்தளாயில் வந்தபோது கண்டியில் கலகம் எனக் கேள்விப்பட்டார். அவர் மேலும் தொடர்ந்து பிரயாணமாகி நலந்தா என்ற இடத்தை அடைந்த போது அங்கே எகிலப் பொல யானைகளும் 3000 மக்களும் புடை சூழ ஆள்பதியை எதிர்கொண்டு உபசரி துத்துத் தான் மாத்தளை திசாவையை மானபங்கஞ் செய்தமையை மன்னிக் குமாறு வேண்டினான்.

மானபங்கஞ் செய்யப்பட்ட திசாவை முதலதிகாரியாய மொலிகொடையின் மாம னார் என்பதும் ஆள்பதிக்குத் தெரியும். என்றாலும் அவர் உடனடியாக எதுவும் சொல்லாமல் எகிலப் பொலவைக் கண்டிக்கு மீளுமாறு கூறினார். இதற்குள் கலகம் நடந்த வெல்லாசிப் பகுதியின் திசாவையாய் இருந்த மலாவை என்பான் மூப்பும் தளர்சியும் அடைந்தமையால் அவனால் அக்காரியங்கள் செய்ய இயலாமையால் அவனை நக்கிவிட்டு ஊவாப் பகுதியில் திசாவையான கெபிற்றிப் பொலயை நியமித்தார்கள்.

### ஓர் எதிர்க் கிளர்ச்சி

மொனறவில கெபிற்றிப்பொல என் பான்எகிலப்பொலவின் மைத்துனன். அவன் ஆங்கிலேயருக்கும் கண்டியருக்கும் இடையில் நடைபெற்ற சமவாய சம்பந்த மகாநாட்டின் உடன்படிக்கையில் கையொப்பமிட்ட பெரியார் களுள் ஒருவன் . அவன் ஊவாப் பகுதியில் திசாவையாய் இருந்து அரிய சேவை செய்தவன். அவன் தீவிர புத்தியும் முற்போக்குக் கொள் கையும் உள்ளவன் என்று மார்சல் தமது சரித்திர நூலில் எழுதியுள்ளார். அவன் நேர் மையாகப் பேசுவதிலும் நடப்பதிலும் நல்லவன் எனப் பெயர் பெற்றமையால் பொதுமக்கள் அவனைப் பெரிதும்

### மீன் பார்வை

அபிமானித்தனர் . கண்டிப் பிரமுகர்கள் அம்மைப்பால் கட்டிக்கொள்ளப் பின் தயங்கியபோது கெபிற்றி பொல தன் குடும் பத்தோடு முன்வந்து பால் கட்டிக் கொண்டான் என்று மார்சல் எழுதியுள்ளார்.

முன்னர் 1815 ஆம் ஆண்டில் நடைபெற்ற கண்டி மகாநாட்டில் ஆங்கிலேயர் வாக்களித் த வண்ணம் நடந்து கொள்ளவில்லை என்ப தைக் கண்ட கெபிற்றிப் பொல வெளிவெளி யாக ஆங்கிலேயர் பிழைகளைக் கூறினான். இலங்கைக்கு ஒரு நலன்புரி அரச அமைப்பு வேண்டுமாகின் முதலில் ஒரு சிங்கள மன்ன னைத் தெரிந்தெடுக்க வேண்டும். ஆங்கிலேயர் நன்மைசெய் வார்கள் என்று நாம் இனிமேலும் எதிர்பார்த்திருக்கலாகாது. அவர்கள் ஆட்சிக்கு ஒரு முடிவை நாம் உடனடியாகத் தேட வேண்டும் என்றான். தமது பரிபாலனப் பகுதியில் இருந்த சில தலைமைக்காரர்கள் வெள்ளை யராய மாகாண அதிபருக்குப் பணிந்து பந்தம் பிடித்தமையைப் பொறாமல் அவர்களைத் தண்டித்தான். அதனால் ஆள்பதி பிறவுண்றிக் அவர்கள் கெபிற்றிப் பொலவின் செய்கை மாட்சிமைமிக்க ஆங்கிலேய மன்னரை நிந்தித்ததாகும் என்றார்.

ஊவாப் பகுதியில் எதிர்க்கிளர்ச்சி எழுந்த போது ஆங்கிலேயர் அதன் காரணத்தைத் திரித்து அது ஒரு கலகந்தானே அதனை அடக்கி வருக எனக்கெபிற்றிப்பொல திசாவைய்ய ஆயுதங்களுடனும் படையுடனும் அனுப் பினர். கரவறியாத கெபிற்றிப்பொல ஊவா வுக்குப்போனபோது அது வெறுங்கலகமல்ல. அது வெள்ளையரை வெளியேற்ற வேண்டு மென எழுந்த ஓர் எதிர்க்கிளர்ச்சி என அறிந்தான். உடனே தான் கொண்டு சென்ற வெள்ளை யரின் ஆயுதங்களை அவர் களிடம் திருப்பி அனுப்பிவிட்டு எதிர்க் கிளர்சியாளரிடையே புகுந்து அவர்களால் தலைவராகத் தெரியப் பட்டார். தலைவரான கெபிற்றிப்பொல இலங்கை சுதந்திரமடைய வேண்டிய வழிகளை வகுப்பாராயினர்.

மொலிகொடையும்எகிலப்பொலவும் ஆங்கிலேயர் பக்கத்தில் இருந்த காலத்திலேயே கெபிற்றிப்பொல கலகக்காரருக்குத் தலை வரானார். அவருக்கு கொட கெதற அதிகாரம் ஆகிய பெரியார்களும் வேறு 17 தலைமைக் காரரும் உதவியாயிருந்தனர். அவர்கள் எல்லோரும் ஆங்கில அரசாங்கத்தின் பிரகடனத்தால் 1-1-1818 முதல் அடங்காப் பிடாரிகள் என அறிவித்தல் செய்யப்பட்டனர். அவர்களுடைய பொருள் பண்டங்கள் , ஆத

**க.சி.குலரத்தினம்**

ணங்கள் நிலங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

ஆங்கிலேயர் மட்டக்களப்பு முதல் பதுளை வரையுள்ள வீதியை நன்கு பாதுகாத்து வழி யில் முஸ்லிம்கள் அதிகமுள்ள கொட்ட போவா என்ற இடத்தில் படைகள் தங்கும் கூடம் அமைத்து முஸ்லிம்களுக்கு ஆசை வார்த்தைகூறி அவர்களுடைய ஆதரவையும் பெற்றார்கள். அம்பாந்தோட்டை, மாத்தறை, மட்டக்களப்பு, பதுளை, கண்டி முதலிய இடங்களிலிருந்து ஊவாப் பகுதிக்கு வேண் டிய படைகளை அனுப்பினார்கள் .

(தொடரும்)

# அமெ.,இந்திய அரசு மாற்றங்களுக்காக...

இந்தியாவின் முன்னணி ஊடகங்கள் பலவற்றில் பணியாற்றிய அனிதா பிரதாப், 1999ஆம் ஆண்டுவரை சி.என்.என்.தொ லைக்காட்சியின் தெற்காசியப் பிரிவின் செய் திப் பணிப்பாளராக கடமையாற்றினார்.

செவ்வியின் முழு விபரம் வருமாறு,

**இலங்கையில் பரவலடைந்துள்ள வன் முறைகளின் முடிவு எங்கே என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

இலங்கையில் இன வன்முறை என்பது கொடிய வளைவுகளாக அதிகரித்துக்கொண் டே உள்ளன. ஒருகாலத்தில் வன்முறைகள் உச்சக்கட்டத்தில் காணப்படும். பின்னர் குறை யும். பிறகு மீண்டும் அதிகரிக்கும் இவை உடன டியாக முடிவுக்கு வரும்என்று எனக்குத் தெரிய வில்லை. தற்போதுள்ள நிலையில் மாற்றம் ஏற்படுமானால் இன்னும் அதிகரிக்கும் என் றே நான் நினைக்கிறேன்.

தற்போது தனக்குச் சாதகமான சூழ்நிலை நிலவுவதாக அரசு கருதுகின்றது. அதனால் அது தனது நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் நாட்டமாகவுள்ளது.

விடுதலைப்புலிகளை இராணுவ ரீதியாக பலமிழக்கச் செய்வதன் மூலம் அவர்களை பேச்சு மேசைக்கு கொண்டு வரலாம் என்று அரசு எண்ணுகிறது என்று நான் நினைக்கின் றேன். கடந்த அரசுகளும் இதேபோன்றுதான் செயற்பட்டன. ஆனால் அவர்கள் நினைத்தது போன்று நடக்கவில்லை.

***என்றாவது ஒருநாள் நான் இலங்கைக்குச் சென்று பிரபாகரனை சந்தித்து அவரது வாழ்க்கை வரலாறை எழுத வேண்டும் என்ற நம்பிக்கையுடன் உள்ளேன்.***

அரசு இதனை மறுத்திருக்கின்றது. ஆனால் அது உண்மை என்றால் அரச தலைவரின் உலங்கு வானூர்தி அணி மீதான தாக்குதல் பாரதூரமான விடயம். இந்த தாக்குதலானது அரசின் "இதயம்"வரை அண்மித்து தாக்கு தல் நடத்தக் கூடிய சக்தியை விடுதலைப் புலி கள் கொண்டுள்ளார்கள் என்பதை காட்டியுள் ளது.

புலிகளின் இவ்வாறான தாக்குதல்க ளுக்கு பதிலளிப்பதானால் அவர்களை முறி யடிக்கும் முயற்சியில் அரசு இன்னமும் கூடுத லாக செயற்பட வேண்டியிருக்கின்றது.

ஆனால் அவ்வாறான அரசின் பதில் நட வடிக்கையில் பொதுமக்கள் பாதிக்கப்பட்டால்- மக்கள் ஆதரவின் மூலம் விடுதலைப்புலிகள் மட்டுமே பலம் பெற்றுக்கொள்வார்கள் .

**இலங்கையில் நிலவும் தற்போதைய இரா ணுவ நிலைமை குறித்து என்ன நினைக் கின்றீர்கள்? விடுதலைப்புலிகள் இரா ணுவ ரீதியாக பலமிழந்து விட்டார்கள் என்று கருதுகின்றீர்களா?**

ஆம் விடுதலைப் புலிகள் பலமிழந்து விட்டார்கள் என்ற கருத்து நிலை ஒன்று உள் ளது. ஆனால், கடந்த காலத்தை எடுத்துக் கொண்டால் நிகழ்காலம் தமக்கு பாதகமாக அமையும் போதெல்லாம் புலிகள் தமது நடவ டிக்கைகளை அடக்கி வாசித்துள்ளார்கள்.

ஆனால் அக்காலப்பகுதியில் அவர்கள் சோம்பல் முறித்துக்கொண்டோ - நேரத்தை வீணடித்துக்கொண்டோ இருப்பதில்லை. அந்த வகையில்அவர்கள் தற்போது பெரும் தாக் குதலுக்கு தயாராகிக் கொண்டிருக்கின்றார்கள். அதற்கு தம்மை ஒழுங்கமைத்துக் கொண்டி ருக்கின்றார்கள். மீண்டும் எழுந்துவர தயாரா கிக் கொண்டிருக்கின்றார்கள். பிரபாகரன் பொறுமையான மனிதர். அவர் நேரத்தை வீணடித்ததை நான் பார்த்ததே இல்லை. அவ ரது மூளை ஏதாவது ஒரு விடயத்தை நோக்கி எந்நேரமும் துடித்துக்கொண்டே இருக்கும். விடுதலைப்புலிகள் இயக்கம் மிகச்சிறந்த தொரு கெரில்லா அமைப்பு .ஆனால் நாட்டின் வலிமை குறையும் நேரங்களில் விடுதலைப் புலிகள் மரவுவழி இராணுவமாக மாறி சமரிட் பார்கள்.

இந்த வழியை 1990களின் ஆரம்ப பகுதி களில் முயற்சித்த பிரபாகரன் இதனைத் தொ டர முடியாது என்பதை உணர்ந்து கொண் டார். புலிகளிடம் உள்ள வளங்களைப் பொறுத்த வரை இது மிகவும் விலை மதிப்பானது என் பதையும் விளங்கிக்கொண்டார். இராணுவ ம் எல்லா இடங்களிலும் ஏககாலத்தில் காணப் படும்போது புலிகள் ஒரு கெரில்லா அமைப் பாக இருந்து தமது நேரத்தை, நடவடிக்கை களை மீளத் திட்டமிடுவதிலும் தம்மை மீள ஒருங்கமைத்துக் கொள்வதிலும் செலவிடு கின்றார்கள்.

இதனை இராணுவ வெற்றியாக அரசு கருது வது பாரதூரமான பிழையாகும். வானின் நீலத்தை கிழித்துக்கொண்டு வரும் மின்னல் போன்று சுருக்கமாகவும் கூர்மையாகவும் தமது தாக்குதல்களை நடத்துவதில் விடுத லைப்புலிகள் வல்லவர்கள்.

ஆகவே, புலிகளை அடிமட்ட நிலைக்கு கொண்டுவந்துவிட்டோம் என்று அரசு பிழை யான முடிவுக்கு வருவது சரி என்று எனக்குப் படவில்லை.

**விடுதலைப்புலிகளுக்கு எதிராக நடத் தப்படும் தற்போதையபோரில் இலங்கை அரசு தனது இலக்கை அடைந்து விட்ட தாக நீங்கள் கருதுகின்றீர்களா?**

அரசாங்கம் என்பது போர் தொடர்பாகவே சிந்திக்கக்கூடாது. போரை நான் வெறுக்கின் றேன். போருக்கு ஆதரவளிக்க என்னால் முடி யாது. தனது நாட்டு மக்களுக்கு எதிராக ஒரு போரை நடத்துவது தொடர்பாக எந்த ஒரு அரசும் சிந்திக்கவே கூடாது.

ஆனால் இலங்கையில் அது நடைபெறு கின்றது. அரசு, தனது எதிரிகளுக்கு எதிராக மட்டுமல்லாமல் தனது சொந்த மக்களுக்கு எதிரான கீழ்த்தரமான ஒரு போரை நடத்தி வருகின்றது.

*"இன்றைய உலகில் முழுமையான ஒழுக் கத்துடனும் தனது தலைமைக்கு விசுவாசமாக வும் ஒரு விடுதலை அமைப்பு உள்ளதென் றால் அது விடுதலைப் புலிகள் இயக்கம் ஒன்றேதான்.*

நான் அரசாங்கத்தில் இல்லை. அப்படி இருந்திருந்தால், போரை நடத்துவதற்கான கட்டாய நிலைக்கு நான் தள்ளப்பட்டால் அமை தியைகொண்டுவருவதற்கான பேச்சுக்க ளுக்கு ஒரு கருவியாகவே போரை-கடைசித் தெரிவாக-பயன்படுத்தியிருப்பேன்.

அமைதியும் சுபீட்சமும்தான் எந்த அரசின தும் இலக்காக இருக்கமுடியும். போர் என்ப தன் அர்த்தம் முடிவு. போர் எனப்படுவது ஒரு நாட்டின் அமைதிக்கும் சுபீட்சத்திற்கும் உறுதி நிலைக்குமான முடிவாகவே இருக்கமுடியும்.

இலங்கையைப் பொறுத்தவரை போர் தான் போருக்கு முடிவாக இருக்க முடியும் போல தெரிகின்றது. பல தனிநபர்களினதும் குழுக்களினதும் விருப்பத்துக்கு அமையவே போர் தொடரப்படுகின்றது.

**அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எதிர்காலத்தில் உடனடிப் பேச்சுக் கள் ஆரம்பமாகும் சாத்தியங்கள் உள்ளனவா?**

நிச்சயமாக நடைபெறும். ஆனால் இந்த வருடம் அல்ல. தமது அதிகாரத்தை இழந்து கொண்டிருக்கும் தலைவர்களைக்கொண்ட இரண்டு நாடுகள் இலங்கையில் அமைதியை ஏற்படுத்துவதில் பெரும்பங்கு வகிக்கின்றன என்பதை பலர் உணரவில்லை. ஆம், இந் தியாவும் அமெரிக்காவும்தான் அவை. இந்த ஆண்டுடன் அமெரிக்காவில் புஷ் பதவி இழக்கின்றார். இந்தியாவில் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலுடன் புதிய அரசியல் முன்னணி ஆட்சிக்கு வரவுள்ளது.

ஆகவே இன்னும் ஒரு வருடத்துக்குள் இலங்கையில் அமைதிப்பேச்சு எதுவும் நடை பெறப்போவதில்லை. தற்போது ஏற்பட்டிருப் பது ஒரு வெற்றிடமான காலப்பகுதி.

இலங்கை அரசு, வேகமாகவும் உக்கிர மாகவும் போரில் இறங்கியிருப்பதற்கு இது வும் ஒரு காரணம். முக்கியமாக வரப்போகும் மழை காலத்துக்குப் பின்னர் போரை மேலும் தீவிரப்படுத்தும்.

**தற்போதைய சூழ்நிலையில் இந்தியா என்ன செய்யவேண்டும் என்று நீங்கள் கருதுகின்றீர்கள்?**

இலங்கைப் பிரச்சினை தொடர்பில் இந்தி யா மிகவும் கவலை கொண்டுள்ளது. இந்திய அமைதிப் படை விவகாரத்துக்குப் பின்னர் இலங்கையில் நேரடியான இராணுவத் தலை யீட்டை மேற்கொள்ள இந்தியா தீவிரமாக இல் லை.

ஆனால் பிராந்தியம், பாதுகாப்பு, உப கண்ட உறுதிநிலை ஆகியவை தொடர்பிலே யே இந்தியா, இலங்கை விவகாரத்தில் மிகவும் தீவிரமாகவுள்ளது.

ஆனால் இலங்கையில் அமைதிப்பேச்சுக் களுக்கு அனுசரணை வழங்குமளவுக்கு இந்தியாவில் தற்போது ஆட்சியில் உள்ள அரசக்கு விருப்பமோ நேரமோ இல்லை.

அதற்காக இந்தியா முற்றுமுழுதாக இலங் கை விவகாரத்திலிருந்து விலக விட்டதாகஅது அர்த்தமாகிவிடாது இலங்கையை முழுமை யாக போர் சூழ்ந்தநிலை இருக்கக்கூடாது என்பதில் இந்தியா தெளிவாக இருக்கின்றது.

**அண்மையில் இலங்கைக்கான இந்திய உயர் மட்டக்குழுவினரின் திடீர்ப் பயணம், அதன் பின்னர் வெளியான இந்தியாவின் இராணுவ உதவி குறித்தான செய்தி ஆகிய வை தொடர்பான உங்கள் கருத்து என்ன?**

நான் மேற்கூறிய காரணங்களே இந்தப் பயணத்தின் நோக்கமாகும். உயர் மட்டக் குழுவினரின் இந்த வருகை வழமையாக நடைபெறுகின்றதொரு பயணமோ அல்லது பொதுமக்கள் தொடர்பான பயணமோ அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இந்திய அரசானது அரசியல் குழப்ப நிலைக் குள் சிக்கி, தற்போதைய ஆட்சியாளர்கள் அதிகாரத்தை இழந்து செல்லவேண்டிய நிலையில் தேர்தலை எதிர்நோக்கி வங்குரோத் தான நிலையில் உள்ளதென்ற கணிப்பீடு இலங்கை அதிகார பீடத்தின் மத்தியில் உள் ளது என்பது இந்திய அரசுக்குத் தெரியும்.

இந்தியாவின் இந்த நிலை இலங்கை ஆட் சிப் பீடத்தின் ஒரு பகுதியினருக்கும் பல கண்டு பிடிப்புக்களுக்கு வித்திட்டிருக்கின்றது.

இந்தக் கண்டுபிடிப்புக்களுக்கு எதிரான - கடுமையான -தனது எச்சரிக்கையை விடுப் பதற்கே இந்திய உயர்மட்டக்குழு அண்மை யில் கொழும்புக்குச் சென்றிருந்தது.

விடுதலைப் புலிகளினதோ இலங்கை அர சினதோ ஆதிக்க நிலையை இந்தியா விரும்ப வில்லை. வெகுதூரத்திலுள்ள அமைதியுடன் பாட்டால் இலங்கையில் அமைதிக்காக ஏற் பட்டுள்ள வெற்றிடத்தில், வரையறைக்குட்பட்ட வன்முறைகளை கடைபிடிப்பதன் மூலம் அரசும் புலிகளும் சமபலத்தை பேணிக் கொள்ளட்டும்.

நிலைமை கைமீறிப் போகும் அளவுக்கு பாரிய போர் ஏற்பட்டுவிடக்கூடாது.

இதுவே இந்தியாவின் பாதுகாப்புத் தரப் பினரதும் வெளிவிவகாரத்தரப்பினரதும் இலங் கை தொடர்பான பார்வையும் எதிர்பார்ப்பும் ஆகும்.

**தமிழீழ விடுதலைப் போராட்டம் தொ டர்பான மேற்கு நாடுகளின் பார்வையில் கொள்கை மாற்றங்கள் ஏதாவது ஏற்பட் டுள்ளனவா? கனடாவிலும் இத்தாலியி லும் அண்மையில் ஈழத்தமிழ் ஆதரவா ளர்கள் கைது செய்யப்பட்ட சம்பவங்களின் பின்னணியில், இது தொடர்பில் உங்கள் விளக்கம் என்ன?**

புஷ் ஆரம்பித்த பயங்கரவாதத்துக்கு எதி ரான போரினால், சுதந்திரத்துக்காகப் போரா டும் அமைப்புக்கள் உட்பட அனைத்துக் குழுக்களும் பயங்கரவாத அமைப்புக்கள் என்ற பெயருக்குள் அடக்கப்பட்ட மிகப்பெரிய தவறு இடம்பெற்றிருக்கின்றது.

பயங்கரவாதத்துக்கு எதிரான இந்தப்போர் இரண்டு தசாப்தங்களுக்கு முன்னர் நடை பெற்றிருக்குமானால், நெல்சன் மண்டேலா உலகின் மிகப் பயங்கரமான தீவிரவாதியாக முத்திரை குத்தப்பட்டு இன்னமும் சிறைவாசம் அனுபவித்துக்கொண்டிருப்பார்.

அதேவேளை மண்டேலா அண்மையில் தான் பயங்கரவாதிகளின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டிருக்கிறார்.

பயங்கரவாதத்துக்கு எதிரான போர் எனப் படுவது பயங்கரவாதிகளின் நடவடிக்கைக ளையும் விடுதலை அமைப்புக்களின் நடவடிக் கைகளையும் வேறுபடுத்திப் பார்க்கவில் லை.

(அ)

## ஆடிவேல் விழாவில் நாய்களின் உதவியுடன் பக்தர்கள் சோதனை

(கொழும்பு)

கதிர்காம ஆடிவேல் விழா உற்சவகால பெரஹராவில் பார்வையாளராக இருக்கும் பக்தர்கள் நாய்களின் உதவியுடன் சோதனை செய்யப்படுவதாக கவலை தெரிவிக் கப்படுகிறது.

கங்கை மற்றும் ஆலயம் உள்ளிட்ட பிரதேசங்களுக்குச் செல்லும் நுழை வாயிலில் தீவிர பொருட் பரிசோதனை மற்றும் உடற் சோதனை செய்யப்படுகிறது. அதன் பிறகு பெரஹரா பார்க்க அமர்ந்திருக் கும் வேளையில் மீண்டும் நாயுடன் வந்து சோதனை செய்வதென்பது எவ்வகையில் பொருந்தும்? என பக்தர்கள் கேட்கின்றனர்.

இந்த நாய்ச் சோதனையால் பெரஹரா நிகழ் வில் பூரணதிருப்தி அடைய முடியாதுள்ளதாக தெரிவிக் கப் படுகின்றது.

(அ-5)

## பரீட்சைக்கு இடையூறு ஏற்படுத்தாதீர் கட்சிகளிடம் ஆணையாளர் கோரிக்கை

(கொழும்பு)

உயர் தரப் பரீட்சைக்குப் பாதகம் ஏற்படாத வகையில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் எனப் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் கட்சியின் செயலாளர்களுக்கு இது தொடர் பான எழுத்து மூலக் கோரிக்கை விடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

உயர்தரப்பரீட்சை நேர அட்டவணை மற்றும் பரீட்சை இடம் பெறும் பாடசாலைகள் தொடர்பான முழு விபரங்கள் அடங்கிய அறிக்கையொன்று தேர்தல் ஆணையாளருக்கு ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

(அ-5)

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## அரசாங்கம்
# கேள்வி அறிவித்தல்

மாவட்ட செயலகத்தில் கீழ்வரும் வேலைகளை மேற்கொள்வதற்காக கேள்விப்பத்திரங்கள் பொருத்தமான கேள்விதாரர்களிடம் இருந்து எதிர்பார்க்கப்படுகின்றது.

| தொ. இல | வேலை விபரம் | ICTAD தரம் | மீளளிக்க முடியாத வைப்பு தொகை (ரூபா) | மீளளிக்கவுடிய வைப்பு தொகை (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கேட்போர் கூடத்திற்கும் மகாநாட்டு மண்டபத்திற்கும் இடையேயான ப்குதிக்கு கூரை அமைத்தல் | M9 | 500.00 | 1,000.00 |
| 2 | தேநீர்ச்சாலையின் அவசியமான திருத்த வேலைகள் | M9 | 500.00 | 1,500.00 |
| 3 | பழைய பூங்காவின் முன்புறமுள்ள மதிலிற்கு இரும்பினாலான Grill இடுதல் | M9 | 100.00 | 500.00 |
| 4. | மாவட்ட செயலக பிரதான கட்டத்தின் பின் பக்கத்திற்கு தீந்தை பூசுதல் | M9 | 750.00 | 4,000.00 |
| 5 | மோட்டார் வண்டி தரிப்பிடம் அமைத்தலும் கிறசர் தூள் ( Crusher dust) இடுதல் | M9 | 1,000.00 | 8,000.00 |

கேள்வி ஆவணங்களையும் ஏனைய தகவல்களையும் சாதாரண வேலை நாட்களில் மு.ப.9.00 தொடக்கம் பி.ப 12.30 வரையும், பி.ப 1.30 தொடக்கம் பி.ப.3.30 வரையும் 2008.07.16 ஆந் திகதி தொடக் கம் 31.07.2008 ந் திகதி வரை உதவி அரசாங்க அதிபர் (த.பீ) இடம் பெற்றுக் கொள்ளலாம். முடிவுத் திகதிக்கு முந்திய தினம் வரை குறிப்பிட்ட வேலை தொடர்பான விபரங்களை பார்வையிடமுடியும்.

கேள்விகள் 01.08.2008 ந் திகதி பி.ப 2.00 மணிக்கு திறக்கப்படும் வேளை கேள்விதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் சமூகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர்.

ஒவ்வொரு வேலைக்கும் தனித்தனியாக பொறியிடப்பட்ட கேள்விகள் "**தலைவர், மாவட்ட செயலக கேள்விச்சபை, மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்**" என முகவரியிட்டு மாவட்ட செயலக நிர்வாக கிளை யில் உள்ள கேள்விப் பெட்டியில் இடவேண்டும் அல்லது பதிவுத்தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட வேண்டும். பிந்திய கேள்விப்பத்திரங்கள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. அத்துடன் **தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலை விபரத்தை** குறிப்பிடுதல் வேண்டும். மீளளிக்க முடியாத வைப்புதொகை, மீளளிக்கவுடிய வைப்பு தொகை என்பவற்றை செலுத்தி யமைக்கான பற்றுச்சீட்டு, இக்ராட் (ICTAD) பதிவு புத்தகம் வர்த்தகத் தலைப்புடனான கடிதத்தை சமர்ப் பிப்பதன் மூலம் கேள்வி ஆவணங்களை பெற்றுக்கொள்ள் முடியும். ஒரு விண்ணப்பதாரர் ஒன்றுக்கு மேற்பட்ட வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும்.

க.கணேஷ்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

(சி/1320)

# அரசுக்கு எதிரான பரப்புரையில் ஒளிப்படங்களின் பங்கு அளப்பரியது

## விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் தெரிவிப்பு

(கொழும்)

அரசாங்கத்துக்கு எதிரான பரப்புரையில் ஒளிப்படங்களின் பங்கு அளப்பரியது என்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.

மன்னார் களமுனையில் சிறப்பான களப்படப்பிடிப்பை மேற்கொண்டு தமிழீழத் தேசியத் தலைவரின் பாராட்டுக்களைப் பெற்ற போராளிகளை மதிப்பளித்தல், வீரவேங்கை அருச்சுனாவின் 22ஆம் ஆண்டு நினைவு மற்றும் மூன்றாவது தேசிய ஒளிப்படப் போட்டிக்கான பரிசளிப்பு நிகழ்வில் சிறப்புரையாற்றிய போது அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

விடுதலைப் போராட்டத்தின் தொடக்க கால வரலாற்றை இன்று ஒளிபடங்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. புலம்பெயர்ந்த எமது மக்கள் மத்தியிலும் பன்னாட்டு அரசுகளுக்கும் இலங்கை அரசாங்கத்தின் கொடூரமான போர் நடவடிக்கை களை வெளிப்படுத்துபவையாக ஒளிப் படங்கள் உள்ளன.

தமிழர்களின் தொடக்ககால வரலாற்று ஆவணமாக பேணப்படாத சூழ்நிலையில் எமது விடுதலைப் போராட்டம் தொடக்கப்பட்ட பின்னர் விடுதலைப் போராட்ட வரலாற்றையும் மக்களின் எழுச்சியையும் ஒளிப்படங்கள் ஆவணப்படுத்தி உள்ளன. எமது விடுதலைப் போராட்ட வரலாற்றை ஆவணப்படுத்தவதில் ஒளிப்படங்களுக்கு முதன் மைப் பங்கு உண்டு.

இன்று கூட படையினர் நடத்தி வரும் போர் நடவடிக்கைகள், எறிகணை வீச்சுக்கள் மற்றும் வான் தாக்குதல்கள் என்பவற்றை ஊடகங்கள் ஊடாக புலம்பெயர்ந்த எமது மக்களுக்கும் பன்னாட்டு அரசுகளுக்கும் எடுத்துச் சென்று அரசாங்கத்தின் கொடூரமான முகத்தை வெளிப்படுத்தி நியாயங்களைத் தேடிக்கொள்வதில் ஒளிப்படங் களின் பங்கு முதன்மையான தாகும்.

அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள பொருண்மியத் தடைகளினால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் களை வெளிக்கொணர்வதில் ஒளிப் படங்களின் பங்கு அளப் பரியது.



ஊடகத்துறையில் இன்று ஒளிப் படங்கள் பெரும் ஆட்சி புரிகின்றன. எமது விடுதலைப் போராட்டத்திலும் போராளிகள் எமது விடுதலைப் போராட்டத்தை ஆவணப்படுத்து வதில் தமது உயிர் களை ஈர்ந்து மா வீரர்கள் ஆகியுள்ளனர்.

போராளிகளின் ஈகத்தினால்தான் எமது வீரவரலாறு ஆவணப்படுத்தப்பட்டு வருகின்றது. தமிழீழ தேசியத் தலைவர் அவர்கள் ஒளிக்கலைத்துறை பெரும் வளர்ச்சி அடையவேண்டும் என்பதில் பெரு விருப்பு கொண்டுள்ளார்.

அமைதிப் பேச்சுகாலங்களில் ஒளிப்படங்களை நாம் எடுத்து சென்று தமிழ்மக்களுக்கு அரசாங்கம் புரியும் கொடூரங்களை பன்னாட்டு அரசுகளிடமும் மனித உரிமை அமைப்புக்களிடமும் வழங்கினோம். அரசாங்கத்துக்கு பன்னாட்டு அரசுகள் அழுத்தம் கொடுப்பதற்கு ஒளிப் படங்களும் முக்கிய காரணமாக இருந் திருக்கின்றது என்றார் அவர். (அ-5)

## இலங்கைக் கடற்படையைக் கண்டித்து விஜயகாந்த தலைமையில் ஆர்ப்பாட்டம்

### ஆயிரக்கணக்கானோர் பங்கேற்பு

(கொழும்பு)

தமிழக மீனவர்கள் மீது இலங்கைக் கடற்படை தாக்குதல் நடத்துவதைக் கண்டித்து கடந்த ஞாயிற்றுக்கிழமை இராமேஸ்வரத்தில் தே.மு.தி.க.தலைவர் விஜயகாந்த் தலைமையில் ஆர்பாட்டம் நடந்தது. இதில் ஆயிரக்கணக்கான மீனவர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கைக் கடற்படை தாக்குதலைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையறையற்ற வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். போராட்டத்துக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் இராமே ஸ்வரம் த்ாலுகா அலுவலகம் முன்பு விஜயகாந்த் தலைமையில் தே.மு .தி.க. வினர் ஆர்பாட்டம் நடத்தினர்.

தமிழக மீனவர்கள் மீன்பிடியில் ஈடுபடும் பகுதியான கச்சதீவை இலங்கையிடம் கையளித்தபோது, பதவியைக் காப்பாற்றிக் கொள்ள எதிர்ப்பு எதனையும் தெரிவிக்காத கருணாநிதி,

தற்போது இலங்கைக் கடற்படையினரால் தமிழக மீனவர்கள் சுடப்பட்டு உயிரிழக்கும் போது, மத்திய அரசாங்கத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக் காது, கடலில் தூக்கி எறிந்தால், கட்டுமரமாகி வருவேன் அதில் மீனவர்கள் பயணம் செய்யலாம் எனக் கவிதை பாடுவதாகவும் விஜயகாந்த சுட்டிக் காட்டியுள்ளார்.

மீனவர்களின் வாக்குகளைப் பெற்றுச் செல்லும் இவர்கள் தமிழக மீனவர் நலனில் அக்கறை செலுத்த வில்லை என அவர் குற்றஞ் சுமத்தியுள்ளார். ஆயிரக்கணக்கான தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் நிர்வாணப்படுத்தி, மனித உரிமை மீறலில் ஈடுபட்டுள் ளதாகவும் விஜயகாந்த குறிப்பிட்டுள் ளார்.

இதேவேளை பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகத் தான் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப் படுவதாகவும் எனினும் 1987 ஆம் ஆண்டு இலங்கைத் தமிழர்களின் நலனுக்கான இந்தியாவுடன் செய்து கொண்ட இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாண ஒப்பந்தத்தை இலங்கை அரசு கிழித்துக் குப்பையில் எறிந்துள்ளது எனவும் விஜயகாந்த் தெரிவித்துள்ளார்.

அதேபோல் பிரச்சினைக்குரிய கச்சதீவு உடன்படிக்கையை இந்திய மத்திய அரசு கிழித்துப்போட்டு விட்டு, தமிழக மீனவர்களைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

(அ-5)

### சார்க் மாநாட்டை முன்னிட்டு
## நீர்கொழும்பு-கொழும்பு வீதியின் இருமருங்கும் வசிப்போர் விபரம் திரட்டல்

(கொழும்பு)

சார்க் மாநாட்டினை முன்னிட்டு கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாக கட்டுநாயக்க விமான நிலைய சந்தியிலிருந்து கொழும்பு வரையான நீர்கொழும்பு கொழும்பு பிரதான வீதியின் இரு மருங்கிலுமுள்ள வீடுகளில் வசிப் போரதுவிபரங்கள் பொலிஸாரினால் சேகரிக்கப்பட்டு வருகின்றன.

கடந்த 13ஆம் திகதி முதல் இந்த விபரங்களை சேகரிக்கும் பணி ஆரம் பிக்கப்பட்டுள்ளது. ஜாஎல பகுதியில் நேற்று முன்தினம் வீடுகளுக்குச் சென்ற பொலிஸ் அதிகாரிகள் வீட்டில் வசிப்போரது பெயர் விபரங் களை பதிவு செய்துள்ளனர். நீர் கொழும்பு கொழும்பு பிரதான வீதியில் இரு மருங்கிலும் உள்ள வீடு களில் வசிப் பவர்களின் விபரங்கள் முழுமை யாக பெறப்படும் என பொலிஸ் வட்டாரங் கள் தெரிவித்தன.

இதேவேளை, நீர்கொழும்பு பிரதான வீதியில் பொலிஸாருடன் இணைந்து சிவில் பாதுகாப்புக் குழுவினரும் வீதியின் இரு மருங் கிலும் உள்ள வெறும் காணிகளை துப் பரவு செய்து வருகின்றனர். (அ)

முட்டாளுடன் விருந்து உண்பதை விட-அறிவாளியுடன் கல் சுமப்பது மேல்.
- *அர்மீனியா*

# வலம்புரி

## வேதனைதான் வாழ்க்கை என்றால் தாங்காது பூமி

இலங்கை மக்கள் யுத்தத்தினால்தான் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள் என்றில்லை.

சார்க் மாநாடு நடத்தினால் கூட பெரும் சிரமங்களை பொதுமக்கள் எதிர்நோக்க வேண்டியுள்ளது. இந்த மாநாடு எப்போது முடிபடையும் என்ற பெருமூச்சுடனேயே பொதுமக்கள் நடமாட வேண்டியுள்ளது.

சார்க் மாநாட்டின் நோக்கத்தையே சின்னாபின்னமாக்கி மாநாடு கூட்டப்படும் அதிசயமான உண்மை இலங்கையில் நடந்தேறுகின்றது.

சார்க் அமைப்பைச் சேர்ந்த நாடுகளில் மாநாடு நடத்தப்படுவது வழமையாயினும், இலங்கையில் இம் மாநாட்டை நடத்தக் கூடிய சூழ்நிலை அறவேயில்லை எனலாம்.

இந்நிலையில் இலங்கையில் மாநாடு கூட்டப்பட்டதன் நோக்கம் யாது என்பது புரியாத புதிராகவேயுள்ளது. அமெரிக்கா, பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகள் தமது பிரஜைகளை இலங்கைக்குச் செல்ல வேண்டாம் எனவும் இலங்கை பாதுகாப்பான நாடல்ல என்றும் எச்சரிக்கை செய்து கொண்டிருக்கும் போது,

இலங்கையில் சார்க் மாநாடு கூட்டப்படுவது ஆபத்தான - பொதுமக்களை துன்புறுத்துவதான செயலாகவே அமையும்.

இலங்கையில் சார்க் மாநாட்டை நடத்தி முடித்து விட்டோம் என்ற வீறாப்பினால் மட்டும் இலங்கையை அமைதிப் பூங்காவாகப் பிரகடனப்படுத்திவிட முடியாது.

மாறாக அமைதி, சமாதானம் என்பன மக்களின் மனங்களில் ஏற்பட வேண்டும். அதற்கான சூழ்நிலையை ஏற்படுத்துவதே அரசின் கடமையாக இருக்க வேண்டும்.

இதைவிடுத்து யுத்தம் வேகம் கொண்டிருக்கும் போது சார்க் மாநாட்டை கூட்டி புதிய புதிய நடைமுறைகளை அமுல்படுத்தி மக்களை துன்புறுத்துவதெல்லாம் போலித்தனமானவை.

இதிலிருந்து அரசு விடுபட வேண்டும். சார்க் மாநாட்டை ஒட்டி இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கை வரவழைப்பதிலேயே எத்தனையோ பாதுகாப்பு ஏற்பாடு எனில், சார்க் மாநாட்டிற்கான ஒட்டுமொத்த பாதுகாப்பு எவ்வாறிருக்கும் என்பதை ஊகித்தறிய முடியும்.

யுத்தத்தில் மூழ்கி பஞ்சத்தில் வாடும் இலங்கை மக்களுக்கு அவசரமானது சார்க் மாநாடா? அல்லது சமாதானமான வாழ்வா? என்பதை புத்திஜீவிகள் உணர வேண்டும்.

இலங்கையைப் பொறுத்தவரை, அரசியலும் அறிவியலும் மிகத் தூரமான இடங்களில் சுற்றுகின்றன. அறிவியலை அடக்கும் அரசியல் இலங்கைக்குக் கெடுதியை விளைவிக்கின்றது.

எனவே இதிலிருந்து விடுபடுவது கட்டாயமானதாகும்.

# ஆடிப்பிறப்பும் அர்த்தமுள்ள சிறப்பும்

**இன்று ஆடிப்பிறப்பு தினமாகும்**

ஆண்டுதோறும் வரும் தை மாதம் உத்தராயண ஆரம்பமாகவும் ஆடி மாதம் தெட்சணாயன ஆரம்பமாகவும் இந்துக்கள் தை மாதத்தினையும், ஆடி மாதத்தினையும் சிறப்பாகக் கருதுகின்றார்கள்.

ஆடி மாதத்தில் விதை விதைத்தலும், தைமாதத்தில புது நெல்லரிசி எடுத்துப் பொங்கல் விழா நடாத்தலும் எமது இந்துத் தமிழ் மக்களின் பண்பாடாகவுள்ளது. இந்த விதத்திலே ஆடிப்பிறப்பு மற்றைய மாதங்களை விடத்தனிச் சிறப்புடையதாகவும் ஆடி மாதத்தில் வரும் ஆடிச்செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடிப்பூரம், ஆடிக்கார்த்திகை, ஆடிவெள்ளி என்பன சிறப்புமிகு விரத வழிபாட்டு நாட்களாகவும் கொண்டாடப்படுகின்றது.

ஆடி மாதம் உழவர் தம்தொழிலை ஆரம்பித்து வயல்களை உழுதும், விதைத்தும், பல்வேறு பயிர்களைப் பயிரிட்டும் உழுதொழிலை ஆரம்பிப்பதால் இம் மாதத்தில் தொழிற்சிறப்பிற்கும், அதன் விருத்திக்கான இறை வழிபாட்டிற்கும் மக்கள் தம் நேரத்தைச் செலவிடுவதனால் மற்றைய காரியங்கள் விலக் கப்படுகின்றன. இதனை நம்முன்னோர் 'ஆடி விதை தேடி நடு' எனவும் 'ஆடி உழவு தேடி உழு' எனவும் கூறியிருப்பதிலிருந்து அறியலாம்.

உழவுத்தொழிலே உயிர்த்தொழில் எனப் போற்றப்படுவதால் இத் தொழிலை ஆரம்பிக்கும் ஆடி மாதத்தினையும் மீதுங்களிற் பீட மாதம் என உயர்த்தி நம் முன்னோர் கொண்டாடலாயினர் . மற்றைய சுபகாரியங்களை விலக்கிக் உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம் என ஆடிப்பிறப்பைக் கொண்டாடும் எம் மக்கள் இதனை இன்று தவறாக எண்ணி ஆடி பீடை பிடித்த மாதம் இந்த மாதத்திற் சுப காரியங்கள் செய்யக் கூடாது எனக் கருதுகின்றனர். ஆடி பீடமாதமேயன்றிப் பீடைமாதமல்ல.

நவாலியூர் சோமசுந்தப்புலவர் மிக அழகாக 'ஆடிப்பிறப்பிற்கு நாளை விடுதலை ஆனந்தம் ஆனந்தம் தோழர்களே' என ஆடி மாதத்தை ஆனந்தமாக வரவேற்று எல்லோரையும் சேர்ந்து கொண்டாடுவோம் வாருங்கள் எனப்பாடி அழைக்கின்றார்.

ஆடி மாதப்பிறப்பும், ஆடிச் செவ்வாய் வெள்ளி நாட்களும் ஆடிக் காத்திகை பூரநட்சத்திரங்களும் விரத நாட்களாகவும் சிறப்புமிகு வழிபாட்டு நாட்களாகவும் எம்மக்கள் அனுட்டிக்கின்றார்கள்.

ஆடி அமாவாசை எமது தென்புலத்தாராகிய முன்னோர்க்கு நன்றிக் கடன், பிதிர்தர்பண வழிபாடுகள் செய்யும் நாளாக கொண்டா டப்படுகின்றது.

மேலும் ஆடிப்பெருக்கு என ஆடி 18 ஆம் நாளில் புனித நீர்நிலைகளில் நீராடி மகிழ்ந்து ஆலய வழிபாடு கள் செய்து அந்நாளை பெருவிழாவாகக் கொண்டாடுகின்றனர்.

எனவே தட்சணாயண ஆரம்ப காலமாகிய ஆடி மாதம் பிறந்ததும் 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' எனும் பெருமையோடு ஆடி மாதத்தின் பெருமையையும் சிறப்பையும் எல்லோரும் உணர்ந்து நடந்திட உறுதி செய்வோம். பீட மாத மாகிய ஆடி மாதம் பிறந் திட எம்மைப் பீடித்துள்ள துன்பங்கள் யாவும் மறைந்திட இறைவழி பாடுக ளும் நல்லறப் பணிகளும் செய்திடு வோம்.

**நீர்வை மணி**

# தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு 40 வீதம் சிங்கள மாணவர் அனுமதி !

(கொழும்பு)

முதன் முறையாக ஒலுவில் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு சிங்கள மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருப்பதாக துணைவேந்தர் கலாநிதி குசைன் இஸ்மாயில் தெரிவித்துள்ளார்.

2008/2009ஆம் கல்வி யாண்டுக்கு அனுமதிக்கப்படவிருக்கும் மாணவர்களில் நாற்பது வீதமான சிங்கள மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டிருப்பதாகத் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தர் தெரிவித்தார்.

முன்னாள் அமைச்சர் எம்.எச். எம். அஷ்ரபின் பணிப்புரைக்கு அமைய முஸ்லிம் மாணவர்கள் கல்வி பயில்வதற்கென 1995ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஒலுவில் பல்கலைக்கழகத்தில், இந்த வருடமே முதன் முறையாக சிங்கள மாணவர்கள் அனுமதிக்கப்படவிருப்பதாக அந் தப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கூறியுள்ளார்.

கிழக்கு மாகாணத்தை இலங்கைப் படையினர் கடந்த வருடம் முழுமையாகக் கைப்பற்றிய பின்னர் தென் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பிக்கும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

தற்போதைய கல்வியாண்டில் 361 முஸ்லிம் மாணவர்களுக்கும், 140 சிங்கள மாணவர்களுக்கும், 17 தமிழ் மாணவர்களுக்கும் தென்கிழக்குப் பல்கலைக் கழகத்தில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் புதிய அனுமதி குறித்து உன்னிப்பாக அவதானிக்கப்படும் எனத் தெரிவித்திருக்கும் பிரதிக் கல்வி அமைச்சர் மயோன் முஸ்தபா, பல்கலைக் கழகங்களுக்குத் தெரிவு செய்யப்படும் ஒவ்வொரு மாணவனும் அவருடைய சமூகத்தை அடிப்படையாகக் கொண்டு தெரிவுசெய்யப்படக் கூடாது எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, கிழக்குப் பல்கலைக் கழகத்தின் புதிய கல்வியாண்டுக்கு 27 வீதமான சிங்கள மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டிருப்பதாகத்தகவல்கள்வெளியாகியுள்ளன. இதில் 306 சிங்கள மாணவர்களும், 358 தமிழ் மாணவர்களும், 79 முஸ்லிம் மாணவர்களும் அடங்குவதாகத் தெரியவருகிறது.

கடந்த பல வருடங்களின் பின்னர் கிழக்குப் பல்கலைக்கழகத்துக்கு விண்ணப்பித்திருக்கும் சிங்கள மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக அதிகாரிகள் தெரிவிக்கின்றனர். (அ-5)

# தேர்தலின் மூலம் நாம் எதிர்பார்க்கும் ஜனநாயகம் கிடைக்கப்போவதில்லை

## ஐ.தே.க,பா.உ.சரத் ரணவக்க தெரிவிப்பு

(கொழும்பு)

அரசு அன்றாடத் தேவையைப் பூர்த்தி செய்யவும் பல அரசியல் இலாபத்தைப் பெற் றுக்கொள்ளவும் முற்படுகிறது. இந்த வேளை யில் தேர்தல் ஒன்றை நடத்த இருக்கிறது. 'இந்த தேர்தல் நடத்துவது அரசியல் இலாபத்தைப் பெற்றுக் கொள்ளவே. இந்த தேர் தலின் மூலம் நாம் எதிர்பார்க்கும் ஜனநாயகம் கிடைக்கப் போவதில்லை அல்லது சக்தி மிக்க தாக்க போவதில்லை என ஐ.தே.கவின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் ரணவக்க தெரிவித்துள்ளார்.

இந்த அரசு . கூறுகிறது நாங்கள் வேலை வயற்றோருக்கு நிறைய வேலைகளை கொடுத்தோம். எதிர்வரும் காலங்களில் அதற்கான துரித நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறுகிறது. ஆனால் இதில் அரசியல் இலாபங்கள் நிறையவுள்ளன.

இந்த வேலைவாய்ப்புகள் புது கைத்தொழில்களை ஆரம்பித்தோ அல்லது இருக்கும் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்தோ அல்ல. கள்ள நோட்டுக்களை அச்சடித்து சம்பளம் வழங்குகின்றார்கள். நாட்டு மக்கள் இக்கட்டான நிலையில் தமது வாழ்க்கையினை கொண்டு செல்கின்றார் கள். அபிவிருத்தி அடைந்த நாடான பிரித்தானியாவில் ஆள் வீத வருமானத்தில் செலவிடும் தொகை 0.003ஆகும். ஆனால் இலங்கையில் 4 வீதம் ஜனாதிபதியின் தேவைகளுக்காக செலவிடப்படுகிறது.

சில அமைச்சரவை அலுவலுகங்களில் நிர்வாக சபை ஒன்று இல்லை. எல்லா அமைச்சர்களுக்கும் எல்லா மாவட்டங்களி லும் தேர்தல் நடைமுறைகளை கண் காணிக்க செயலாளர்கள் உள்ளார்கள். அவர்களுக்கு சம்பளம்கொடுக்கப்படுகிறது.

அது மட்டுமல்லாது வாகனங்களும் கொடுக்கப்பட்டுள்ளன. 2006 யூன் மாதம் 1.5 ஆக காணப்பட்ட பண வீக்க வீதம் 2007ஆம் ஆண்டு 13.5 ஆகவும் 2008 ல் 28.2 ஆகவும் அதிகரித்துள்ளது. இரு வருடங்களில் 15 வீதமாக அதிகரித் துள்ளது. இவ்வாறு பண வீக்க வீதம் அதி கரிக்கு மாயின் மக்கள் எவ்வாறு தமது வாழக்கையை கொண்டு நடாத்துவார் கள். பண வீக்க வீதம் அதிகரித்துள் ளமையினாலேயே எண்ணெய் விலை போன்றன உயர்ந்துள்ளதாக அரசு கூறுகிறது. (அ)

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

**ஓலைச் சுவடிகள் 62**

**நம்பிக்கைகளும் ஆசாரங்களும்**

## தூங்கும் போது நீண்டு நிமிர்ந்து படுக்க வேண்டுமா?

இரவில் தூங்குகின்றவர்களைக் கவனித்தால் மிக சுவாரசியமாக இருக்கும். பல வகையில் பலரும் படுத்திருப்பார்கள். சரிந்து படுப்பவர்கள், மல்லாந்து படுத்திருப்பவர்கள், கவிழ்ந்து படுத்திருப்பவர்கள் என்று பலவகைகள் காணலாம்.

சிலர் சுருண்டும் கைகால்கள் மடக்கி வைத்தும் தூங்வதைப் பார்க்கலாம். ஆனால் நீண்டு நிமிர்ந்து கிடப்பது இறையருளின் பாகம் என்று முதியோர்கள் கூறுவதுண்டு. நவீன அறிவியல் அடிப்படையில் பார்த்தாலும் இதுவே சரி என்று வெளிப்படும். இரத்த ஓட்டத்துக்கு தடங்கல் வராமல் இருக்க வேண்டுமானால் தூங்கும் போது நீண்டு நிமிர்ந்து படுக்க வேண்டும் என்று விஞ்ஞானம் கூறுகின்றது.

# வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர் நிர்மாணத்திட்டம் யாழ்.மாவட்டம் கட்டம் -IV -2008/2009

## தெரிவு செய்யப்பட்ட கிராமங்கள்

உலக வங்கியின் நிதி உதவியுடன் வடக்கு கிழக்கு வீடமைப்பு புனர்நிர்மாணத்திட்டத்தின் கீழ் நான்காம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு யாழ் . மாவட்டத்தில் கீழ்க்காணும் கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளது என்பதனை அறியத்தருகின்றேன். இக்கிராமத்தெரிவில் ஏதாவது குறைகள் / ஆட்சேபனைகள் இருப்பின் எனக்கு எழுத்து மூலம் ஏழு (07) நாட்களுக்குள் அறியத்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

| தொ. இல | பிரதேச செயலர் பிரிவு | கிராம அலுவலர் பிரிவு | தெரிவு செய்யப்பட்ட கிராமத்தின் பெயர் |
|---|---|---|---|
| 01 | சங்கானை | சுழிபுரம் கிழக்கு | சூரியவளவு |
| 02 | சங்கானை | அராலி தெற்கு | வட்டுமுனை |
| 03 | சங்கானை | அராலி கிழக்கு | ஜயனார் |
| 04 | சங்கானை | தொல்புரம் மேற்கு | வீரவத்தை |
| 05 | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு | மாவிழி |
| 06 | நெடுந்தீவு | நெடுந்தீவு கிழக்கு | காவோலையம்பளை |
| 07 | நெடுந்தீவு | நெடுந்தீவு மத்தி கிழக்கு | கொருவானோ |
| 08 | நெடுந்தீவு | நெடுந்தீவு மத்தி | பெருக்கடி |
| 09 | நெடுந்தீவு | நெடுந்தீவு மத்தி | குருநகர் மேற்கு |
| 10 | நெடுந்தீவு | நெடுந்தீவு மத்தி மேற்கு | சிகிரியம்பள்ளம் |
| 11 | நெடுந்தீவு | நெடுந்தீவு மத்தி கிழக்கு | மாதா |
| 12 | யாழ்ப்பாணம் | மருதடி | மருதடி |
| 13 | யாழ்ப்பாணம் | சிறாம்பியடி | சிறாம்பியடி |
| 14 | யாழ்ப்பாணம் | அத்தியடி | அத்தியடி |
| 15 | காரைநகர் | காரை கிழக்கு | பொன்னாவளை |
| 16 | காரைநகர் | காரை தென்மேற்கு | கருங்காலி |
| 17 | காரைநகர் | காரை வட கிழக்கு | மருதடி |
| 18 | காரைநகர் | காரை வட கிழக்கு | மாளிகை |
| 19 | காரைநகர் | காரை வட கிழக்கு | நடுக்கட்டு |
| 20 | கரவெட்டி | கரவெட்டி மேற்கு | கவுதாளை |
| 21 | கரவெட்டி | அத்தாய் | அத்தாய் |
| 22 | கரவெட்டி | கரவெட்டி மேற்கு | சிறிநாரதா |
| 23 | கரவெட்டி | கரவெட்டி மத்தி | சத்தியத்தோட்டம் |
| 24 | கரவெட்டி | கரணவாய் தெற்கு | வீரபத்திராயன். |
| 25 | கரவெட்டி | நெல்லியடி | முடக்காடு |
| 26 | கரவெட்டி | கரணவாய் தெற்கு | முதலைக்குழி |
| 27 | கரவெட்டி | துன்னாலை தெற்கு | குடவத்தைகோட்டப்பாலை |
| 28 | கரவெட்டி | கரணவாய் வடக்கு | நவிண்டில் – கொற்றாவத்தை |
| 29 | கரவெட்டி | துன்னாலை மேற்கு | விக்காவில் |
| 30 | கரவெட்டி | நெல்லிடி | நெல்லியடி |
| 31 | கரவெட்டி | நெல்லியடி வடக்கு | தேவரையாளி |
| 32 | கரவெட்டி | கரவெட்டி மேற்கு | இராஜகிராமம் |
| 33 | ஊர்காவற்றுறை | கரம்பன் மேற்கு | மெலிஞ்சிமுனை |
| 34 | கோப்பாய் | நீர்வேலி வடக்கு | கம்பன்புலம் |
| 35 | கோப்பாய் | கோப்பாய் தெற்கு | இராமநாதன் கலட்டி |
| 36 | கோப்பாய் | கோப்பாய் தெற்கு | பழனியாண்டவர் |
| 37 | கோப்பாய் | நீர் வேலி வடக்கு | பன்னாலை |
| 38 | கோப்பாய் | ஆவரங்கால் மேற்கு | தச்சங்கலட்டி |
| 39 | கோப்பாய் | கோப்பாய் தெற்கு | மாதாகோவிலடி |
| 40 | கோப்பாய் | அச்சுவேலி தெற்கு | நாவற்காடு |
| 41 | கோப்பாய் | கோப்பாய் தெற்கு | நாவலடி |
| 42 | கோப்பாய் | புத்தூர் கிழக்கு | தமிழாலயம் |
| 43 | கோப்பாய் | சிறுப்பிட்டி கிழக்கு | பன்னாலை SE |
| 44 | கோப்பாய் | கோப்பாய் மத்தி | அம்மன் கோவிலடி |
| 45 | கோப்பாய் | கோப்பாய் வடக்கு | கலம்புரை |
| 46 | கோப்பாய் | கோப்பாய் மத்தி | சுவாமிநாதன் கொலனி |
| 47 | கோப்பாய் | ஆவரங்கால் மேற்கு | மந்திரமலை AW |
| 48 | கோப்பாய் | உரும்பிராய் தெற்கு | செல்வபுரம் |
| 49 | கோப்பாய் | ஆவரங்கால் மேற்கு | நெல்லியோடை |
| 50 | கோப்பாய் | உரும்பிராய் கிழக்கு கரந்தன் UE | ............ |
| 51 | கோப்பாய் | சிறுப்பிட்டி மேற்கு | ஜனசக்தி |
| 52 | கோப்பாய் | சிறுப்பிட்டி மேற்கு | சூழா |
| 53 | கோப்பாய் | அச்சுவேலி மேற்கு | செல்வநாயகபுர |
| 54 | கோப்பாய் | வளலாய் | வளலாய் வடக்கு |
| 55 | கோப்பாய் | கோப்பாய் தெற்கு | கேணி குளத்தடி |
| 56 | கோப்பாய் | ஆவரங்கால் கிழக்கு | மணல்பகுதி |
| 57 | கோப்பாய் | இருபாலை கிழக்கு | மடததடி |
| 58 | கோப்பாய் | ஆவரங்கால கிழக்கு | கோகனை |
| 59 | கோப்பாய் | கோப்பாய் மத்தி | ஆசாரி லேன் |
| 60 | கோப்பாய் | கோப்பாய் தெற்கு | பழைய தபால் கந்தோர் வீதி |
| 61 | கோப்பாய் | ஆவரங்கால் மேற்கு | ஆவரங்கால் மேற்கு |
| 62 | நல்லூர் | அரியாலை வடமேற்கு | அரியாலை வடமேற்கு |
| 63 | நல்லூர் | கந்தர்மடம் வடகிழக்கு | கந்தர் மடம் வடகிழக்கு |
| 64 | நல்லூர் | அரியாலை மத்தி | அரியாலை மத்தி |
| 65 | நல்லூர் | வண்ணார் பண்ணை வடக்கு | வண்ணார் பண்ணை வடக்கு |
| 66 | நல்லூர் | திருநெல்வேலி மேறகு | திருநெலவேலி மேறகு |
| 67 | நல்லூர் | நல்லூர் இராஜதானி | நல்லூர் இராஜதானி |
| 68 | நல்லூர் | கந்தர்மடம் வடமேற்கு | கந்தர் மடம் வடமேற்கு |
| 69 | நலலூா | கொககுவில தென்மேறகு | கொககுவில தென்மேறகு |
| 70 | நல்லூர் | நலலூா வடககு | நலலூா வடககு |
| 71 | நல்லூா | கோண்டாவில் தென்மேற்கு | கோண்டாவில் தென்மேற்கு |
| 72 | நல்லூர் | கோண்டாவில் தென் கிழக்கு | கோண்டாவில் தென் கிழக்கு |
| 73 | நல்லூர் | கொக்குவில் தென்கிழக்கு | கொக்குவில் தென் கிழக்கு |
| 74 | நல்லூர் | திருநெல்வேலி வடகிழக்கு | திருநெல்வேலி வடகிழக்கு |
| 75 | நல்லூர் | அரியாலை மத்தி மேற்கு | அரியாலை மத்தி மேற்கு |
| 76 | பருத்தித்துறை | புலோலி தெற்கு | சிங்கைநகர் |
| 77 | பருத்தித்துறை | கெருடாவில் கிழக்கு | பனுவில் |
| 78 | பருத்தித்துறை | கெருடாவில் கிழக்கு | கொம்மாந்துறை |
| 79 | பருத்தித்துறை | மந்திகை | மந்திகை |
| 80 | சண்டிலிப்பாய் | இளவாலை | இளவாலை |
| 81 | தெல்லிப்பளை | மல்லாகம் மத்தி | தொன்தாளை |
| 82 | தெல்லிப்பளை | வித்தகபுரம் | வித்தகபுரம் |
| 83 | தெல்லிப்பளை | துர்க்காபுரம் | மகதனை |
| 84 | தெல்லிப்பளை | மல்லாகம் வடக்கு | குளமங்கால் |
| 85 | தெல்லிப்பளை | தெல்லிப்பளை கிழக்கு | கோவில்புலம் |
| 86 | தென்மராட்சி | நாவற்குழி மேற்கு | நாவற்குழி மேற்கு |
| 87 | தென்மராட்சி | நுணாவில் கிழக்கு | நுணாவில் கிழக்கு |
| 88 | தென்மராட்சி | எழுதுமட்டுவாள் வடக்கு | எழுதுமட்டுவாள் வடக்கு |
| 89 | தென்மராட்சி | சாவகச்சேரி வடக்கு | சாவகச்சேரி வடக்கு |
| 90 | தென்மராட்சி | இராமவில் | இராமவில் |
| 91 | தென்மராட்சி | தென்மட்டுவில | தென்மட்டுவில் |
| 92 | தென்மராட்சி | மீசாலை வடக்கு | மீசாலை வடக்கு |
| 93 | தென்மராட்சி | நுணாவில் மேற்கு | நுணாவில் மேற்கு |
| 94 | தென்மராட்சி | சரசாலை வடக்கு | சரசாலை வடக்கு |
| 95 | தென்மராட்சி | மண்டுவில் | மண்டுவில் |
| 96 | உடுவில் | உடுவில் வடக்கு | உடுவில் வடக்கு |
| 97 | உடுவில் | ஏழாலை மத்தி | ஏழாலை மத்தி |
| 98 | வேலணை | புங்குடுதீவு மத்தி மேற்கு | புங்குடுதீவு மத்தி மேற்கு |
| 99 | வேலணை | வேலணை வடக்கு | வேலணை வடக்கு |
| 100 | வேலணை | வேலணை வடக்கு | வேலணை வடக்கு |

(4/1321)

**க.கணேஷ்,**
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.

# பல்கலை-கலைப்பீடத்தில் விசேட பாடங்களுக்கு அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா!

## புத்திஜீவிகள் எதிர்பார்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்திற்கு வழமைபோல் இம்முறையும் விஷேட பாடங்களிற்கு அனுமதி வழங்குவதற்கு முயற்சிகள் எடுக்கப்படும் என புத்திஜீவிகள் எதிர்பார்க் கின்றனர்.

கடந்த காலங்களில் சமஸ்கிர தம், இந்து நாகரிகம், மொழியியல், ஆங்கிலம், நுண் கலை, புவியியல், நாடக அரங்கியல் போன்ற பாடங்க ளுக்கு விஷேட அனுமதியின் கீழ் குறிப்பிட்ட தொகை மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இம்முறையும் இப்பாடங்களுக்கான விஷேட அனுமதி வழங்கப் படுவதற்கான முயற்சிகளை கலைப் பீட நிர்வாகம் மேற் கொள்ளும் என புத்திஜீவிகள் எதிர்பார்க்கின்றனர்.

(அ-5)

# ரூபா 135 மில்.பெறுமதியான சிகரெட்டுக்கள் சுங்கத்திணைக்களத்தால் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

டுபாயிலிருந்து சட்டவிரோ தமாக கொண்டுவரப்பட்ட 135.3 மில்லியன் ரூபா பெறுமதியான 4 கோடியே 72 இலட்சம் சிகரெட்டுக்களை சுங்க அதிகாரிகள் கைப்பற் றியுள்ளனர். கடந்த ஜனவரி மாதம் இவை இலங்கைக்கு கொள்கலன் மூலம் அனுப்பிவைக்கப்பட்டிருந்தது. இவற்றிற்கு யாரும் உரிமை கோராததையடுத்து சுங்க அதிகாரிகள் இக் கொள்கலனை கைப்பற்றியுள்ள னர்.

சுங்கத்திணைக்கள பிரதி பணிப்பாளர் பியசேன தலைமை யிலான சுங்க அதிகாரிகள் இச்சட்ட விரோத சிகரெட் தொகுதியை கைப்பற்றியுள்ளனர்.

(அ)


# புலிகளுடன் தொடர்பென வவுனியாவில் சிங்களவர் ஒருவரும் கைது

(வவுனியா)

புலிகளுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இருவர் வவுனியாவில் கைது செய்யப்பட்டுள்ளனர். சந்தேக நபர் ஒருவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில் இவர்கள் குறித்து தெரியவந்ததாகவும் , கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் சிங்களவர் எனவும் இரகசியப் பொலிஸார் தெரிவித்தனர் .

இவர்களிடம் தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(அ)



வட்டு -முருகையா ஆலய அலங்கார உற்சவத்தில் திருமறையும் வாழ்வியலும் என்னும் பொருள் பற்றி சொற்பொழிவாற்றிய செஞ்சொற்கொண்டல் மா.கணநாதனுக்கு யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் ஈ.குமரன் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை படத்தில் காணலாம். (படம்-க.விஜயகாந்தன்)

# சிறந்த பெறுபேறு பெற் ற வெளிவாரி மாணவர்களை உள்வாரியாக இணைக்க ஆணைக்குழு அனுமதி

(யாழ்ப்பாணம்)

வெளிவாரிப் பட்டப்படிப்புப் பரீட்சையில் சிறந்த பெறுபேறு களைப் பெற்ற மாணவர்களிற்கு குறித்த சில பாடங்களிற்கு பல்கலைக் கழகத்திற்கு உள்வாரியாக இணைப்பதற்கு பல்கலைக்கழக மாணி யங்கள் ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது.

யாழ். பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டப்படிப்புகள் பீடத்திலிருந்து குறிப்பிட்ட சில மாணவர்களை கலைப் பீடத்திற்கு இணைத் துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப் படும் என புத்தி ஜீவிகள் எதிர் பார்க்கின்றனர்.

(அ-5)

# பல்கலைக்கழக அனுமதி கிடைக்காதவர்களின் மேல்முறையீடுகள் பரிசீலிக்கப்படும்

## ஆணைக்குழு தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

2007 /2008 கல்வியாண்டிற்கான பல்கலைக்கழக அனுமதிக்கு விண்ணப்பித்த மாணவர்களின் அனுமதி கிடைக்காதவர்கள் தகுந்த காரணங்களைக் காண்பித்து பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவிற்கு மேல்முறையீடு செய்தால் பரிசீல னைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென அறிவிக்கப்பட்டுள் ளது.

அனுமதிக்காக விண்ணப் பிக்கும் போது விடப்பட்ட தவறுகள், வேறு உயர்கல்வி நிறுவனங்களில் விண்ணப்பித்துள்ளமை தொடர்பான விபரங்கள் வெளிப்படுத்தப்பட்டமை, இசற் புள்ளிகளின் அடிப்படைக் கமைவாக பாடங்களை தெரிவு செய்யத் தவறியமை போன்ற தகுந்த காரணங்களைக் காண்பித்து மேல் முறையீடு செய்யலாம் எனவும் பல் கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

மேற்படி மேல் முறையீடுகளை பரிசீலித்து தகுந்த காரணங்கள் சமர்ப்பிக்கப்பட்டால் பல்கலைக் கழகங்களுக்கு அனுமதி வழங்கப் படுமெனவும் ஆணைக்குழு மேலும் குறிப்பிட்டுள்ளது. (அ-5)

# ஆசிப் ஊக்கமருந்து பயன்படுத்தியது நிரூபணம்; சர்வதேச கிரிக்கெட்டில் 2 ஆண்டுகள் தடை வரலாம்

(மும்பை)

முகமெட் ஆசிப் இன்னொரு சர்ச்சையில் சிக்கியுள்ளார். சமீபத்தில் நடந்த ஐ.பி.எல் தொடரில் இவர் ஊக்கமருந்து பயன்படுத்தியது நிரூபணமாகியுள்ளது.

இதையடுத்து சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்க இவருக்கு இரண்டு ஆண்டுகள் தடை விதிக்கப்படலாம்.

இந்திய கிரிக்கெட் சபை சார்பில் இந்தியன் பிரிமியர் லீக் (ஐ.பி.எல்) அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இதன் சார்பில் இருபது -20 தொடர் வெற்றிகரமாக நடந்தது. இத்தொடரின்போது உலக ஊக்க மருந்து தடுப்பு மையத்தின் விதி முறைகளின்படி தோனி உள்ளிட்ட சில வீரர்களிடம் சோதனை நடத்தப்பட்டது.

### சிக்கினார் ஆசிப்

இதில் ஒருவர் மட்டும் ஊக்க மருந்து பயன்படுத்தியுள்ளதாக செய்திகள் வெளியாகின.

இந்த வீரரின் பெயரை அறிவிக்குமாறு பாகிஸ்தான் கிரிக்கெட் சபை நெருக்கடி தந்தது.

அப்போதுதான் சம்பியன் தொடருக்கான உத்தேச அணியை அறிவிக்க முடியும் என தெரிவித்தது.

இதையடுத்து ஊக்கமருந்து பயன்படுத்தியவர் முகமெட் ஆசிப் தான் என்பது நேற்று முன்தினம் உறுதிசெய்யப்பட்டது.

இவர் சேவாக் தலைமையிலான டில்லி டேர்டேவிஸ் அணிக்காக விளையாடினார்.

### அடுத்தது என்ன?

வீரர்களிடம் ஏ, பி என இரண்டு சிறுநீர் மாதிரிகள் பெறப்படும். தற்போது ஏ மாதிரியின் சோதனை அடிப்படையில் தான் ஆசிப் சிக்கியுள்ளார்.

அடுத்த கட்டமாக பி மாதிரி சோதனையை நடத்தும்படி ஆசிப் கோரிக்கை விடுக்கலாம். இந்த சோதனையின் போது இவர் மற்றும் ஐ.பி.எல் அதிகாரிகள் கலந்து கொள்ளலாம்.

பி மாதிரி சோதனை முடிபு ஐ.பி.எல், ஊக்கமருந்து தடுப்புக்குழுவுக்கு அனுப்பி வைக்கப்படும்.

இக்குழுவில் கவாஸ்கர், மாகாராஷ்டிரா பல்கலையின் ரவி பாபத், சட்டத்தரணி ஷிரிஷ் குப்தா இடம் பெற்றுள்ளனர்.

சோதனை அறிக்கையின் அடிப்படையில் இவர்கள் நடவடிக்கை எடுப்பர்.

### ஆசிப் குற்றவாளி

இது குறித்து ஐ.பி.எல் தலைவர் லலித் மோடி கூறியதாவது,

உலக ஊக்கமருந்து தடுப்பு மையத்தின் சார்ப்பில் ஐ.பி.எல் தொடரின் ஆரம்பக் கட்டத்தில் 14 வீரர்களின் சிறுநீர் மாதிரிகள் எடுக்கப்பட்டு பரிசோதிக்கப்பட்டது.

சோதனையில் பாகிஸ்தான் வேகப்பந்து வீச்சாளர் ஆசிப் தடை செய்யப்பட்ட ஊக்கமருந்து பயன்படுத்தியுள்ளது உறுதியாக தெரிய வந்துள்ளது.

அடுத்து இவரது பி மாதிரியை சோதனைக்கு அனுப்புமாறு கேட்டுள்ளோம். ஊக்கமருந்து தடுப்பு மையத்தின் தகவலை உறுதி செய்யும் சோதனை வசதி இந்தியாவில் இல்லை.

மலேசியா அல்லது சுவிட்சர்லாந்துக்கு அனுப்பி இறுதி முடிவை பெற 6 வாரம் காலம் தேவைப்படலாம்.

இருந்தாலும் எங்கள் நடவடிக்கையில் உறுதியாக உள்ளோம். இவ்வாறு லலித் மோடி தெரிவித்தார்.

### நான் குற்றமற்றவன்

டுபாய் விமான நிலையத்தில் அபின் வைத்திருந்ததாக கைது உட்பட பல முறை சர்ச்சையில் சிக்கியவர் தான் ஆசிப். வழக்கம்போல் இம்முறையும் எதுவும் தெரியாது என மறுக்கிறார். இவர் கூறுகையில்,


ஐ.பி.எல் நிர்வாகத்தின் இந்த அறிவிப்பு எனக்கு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அளிப்பதாக உள்ளது. ஏனென்றால் நான் அதிக எச்சரிக்கையுடன் இருந்தேன்.

தடை செய்யப்பட்ட பொருளை ஒரு போதும் நான் பயன்படுத்தவில்லை. அடுத்து என்ன செய்வது என தெரியவில்லை.

இது முதற்கட்ட சோதனை தான் இன்னும் பல சோதனைகள் உள்ளன.

பாகிஸ்தான் கிரிக்கெட் சபையிடம் கலந்து பேசி அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பேன் என்றார்.

### என்ன தண்டனை?



ஐ.பி.எல் தொடரில் ஊக்க மருந்து பயன்படுத்தினால் கடும் தண்டனை விதிக்கப்படும். இதன்படி ஆசிப்புக்கு அபராதம் விதிக்கப்படலாம். அல்லது ஐ.பி.எல் போட்டிகளில் விளையாட ஐந்து ஆண்டுகள் தடை விதிக்கப்படலாம். ஐ.பி.எல் தொடரில் ஆடுவதற்கு ஆயுட்கால தடை விதிக்கப்படலாம். சர்வதேச போட்டிகளில் ஆடுவதற்கு 2 ஆண்டுகள் வரை தடை விதிக்கப்படலாம். (5)

## இலவச மருத்துவமுகாம்

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வண்ணார்பண்ணை பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட மக்களுக்கான இலவச மருத்துவமுகாம் இன்று காலை 9 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை நடைபெறும் என சுகாதாரப் பரிசோதகர் பி.ஆறுமுகதாஸன் அறிவித்துள்ளார். யாழ்.மாநகர சபை ஆணையாளர் சரவணபவ, செயலர் இரத்தினசிங்கம் ஆகியோர் முன்னிலையில் நடைபெறும் இம்மருத்துவ முகாமில் இரத்தம், சலம் மற்றும் இரத்த அழுத்தம் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவுள்ளன. இம்மருத்துவ முகாமில் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (சு)



யாழ்.மாவட்ட புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்தில் நிர்வாக உத்தியோகத்தராக கடமையாற்றி, வலி.மேற்கு பிரதேச சபை செயலாளராக பதவி உயர்வு பெற்றுச் சென்ற சு.புத்திசிகாமணிக்கு யாழ்.செயலகத்தில் நடைபெற்ற பிரியாவிடை வைபவத்தில், திட்டப்பணிப்பாளர் ம.பிரதீபன், கணக்காளர் எஸ்.குகதாசன் ஆகியோர் மலர்மாலை அணிவித்து வரவேற்பதையும் யாழ்.அரச அதிபர் க.கணேஷ் வாழ்த்துத் தெரிவித்து நினைவுப் பரிசு வழங்குவதையும் படங்களில் காணலாம்.

# 29 ஆயிரம் தமிழ் இளைஞர்களுக்கு இந்தியா இராணுவப் பயிற்சி

## அமைச்சர் சம்பிக்க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இந்தியா 29 ஆயிரத்துக்கும் அதிகமான தமிழ் இளைஞர்களுக்கு ஆயுதப் பயிற்சிகளை வழங்கியிருப்பதாக சுற்றாடல் வளத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இராஜதந்திர சட்டங்களை மதிக்காமல் 1984ஆம் ஆண்டு பயங்கரவாதத்தை பயன்படுத்தி இலங்கையின் உள் விவகாரத்தில் இந்தியா தலையிட்டது எனவும் கூறியுள்ளார்.

அப்போது 15ஆயிரம் பேரை மாத்திரம்கொண்டிருந்த இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளை கட்டுப்படுத்த முடியாத நிலையில் காணப்பட்டது.

அந்தக் காலப்பகுதியில் பல தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை எடுப்பதற்கு இந்தியா தூண்டுகோலாக இருந்தது.

வன்னியைக் கைப்பற்றும் நோக்கில் முன்னெடுக்கப்பட்டிருந்த ஜயசிக்குறு மற்றும் ரிவிரச இராணுவ நடவடிக்கையின் போது 12 ஆயிரம் இராணுவத்தினர் கொல்லப்பட்டிருந்ததுடன் 18 ஆயிரம் இராணுவத்தினர் காயமடைந்திருந்தனர். போதிய அளவு இராணுவ பலம் இன்மையாலேயே இந்த இழப்பு ஏற்பட்டிருந்தது.

வெற்றிகளை முடிபுக்குக் கொண்டுவரும் வகையில் 2002 ஆம் ஆண்டு சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. இந்த ஒப்பந்தம் சந்திரிகா -ரணில் ஒப்பந்தம் எனவும் சம்பிக்க ரணவக்க கூறினார்.

சமாதான ஒப்பந்த காலப் பகுதியில் விடுதலைப் புலிகள் விமானங்கள், ஏவுகணைகள், போர்த்தளபாடங்கள் போன்றவற்றை நாட்டுக்கு எடுத்துவந்தனர் என அமைச்சர் ஊடகங்களிடம் கூறினார்.

மாவிலாறு மோதல்களை ஆரம்பித்த இராணுவத்தினர் கிழக்கில் இருந்து முழுமையாக விடுதலைப் புலிகளை விரட்டியடித்து ஏனைய நாட்டு இராணுவத்தினருக்கு ஒரு பாடத்தை புகட்டியிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மோதல்களில் இராணுவத்தினர் ஈட்டிவரும் வெற்றிகளை அறிக்கையிட விரும்பாத சில ஆங்கில ஊடகங்கள் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் அர்ப்பணிப்புடன் செயற்படும் மனிதர் எனவும் விடுதலைப் புலிகள் அமைப்பே உலகத்தில் சிறந்த போராளிகள் அமைப்பு எனவும் சித்திரித்து வருவதாக சம்பிக்க ரணவக்க கூறினார்.

(ச-5)


## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்



கொழும்பில் நடைபெறவிருந்த அஞ்சல் சேவை உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சையை 02/07/2008 அன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற நடவடிக்கை மேற்கொண்ட மாண்புமிகு அமைச்சர் திரு.கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களுக்கு நன்றி கூறுவதுடன் வாழ்த்தி நிற்கின்றோம்.

அஞ்சல் சேவை நேர்முகப் பரீட்சார்த்திகள்

(1463)



## தவறிவிட்டது

டச்சுவீதி, சித்தன்கேணி என்ற முகவரியை சேர்ந்த சந்திரதாஸ் தர்சிந்தன் என்பவருடைய N.I.C No-851522727 V என்ற தேசிய அடையாள அட்டை கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறவிடப்பட்டுள்ளது. கண்டு எடுத்தவர்கள் வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கவும் (1464)



## தவறிவிட்டது

28.07.2008 யா/இந்து மகளிர் கல்லூரிக்கும் யா/ கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் இடையில் 54579251 V இலக்க தேசிய அடையாள அட்டை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரி அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (இ-009)

## பயங்கரவாதத் தடுப்புக்...

குறிப்பிட்டுள்ளார்.

பயங்கரவாதத் தடுப்பு நடவடிக்கைகளுக்காக மோதர கிம்புலாகல பிரதேசத்தில் தமிழர்கள் வீடியோப் படம் எடுக்கப்பட்டதாக மேலதிக சொலிசிட்டர் ஜெனரல் நேற்று உயர் நீதிமன்றில் விளக்கமளித்துள்ளார்.

குற்றச் செயல்களுடன் தொடர்புடையவர்களை இனங்கண்டு கொள்வதற்கே கொழும்பு முகத்துவாரப் பிரதேசத்தில் மக்களை வீடியோப் படம் எடுத்ததாகச் சட்ட மாஅதிபர் தரப்பில் நேற்று உயர் நீதிமன்றத்தில் பதிலளிக்கப்பட்டுள்ளது.

சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கை ஒன்றின் போது முகத்துவாரப் பிரதேசத்தில் தமிழ்மக்கள் மட்டும் வீடியோப் படம் எடுக்கப்பட்டதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் அடிப்படை உரிமை மீறல் மனு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இது நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்ட போதே சட்ட மாஅதிபர் சார்பில் இவ்வாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் இந்த மனு விசாரணைக்கு எடுக்கப்பட்டிருந்தபோது சோதனை நடவடிக்கையில் மக்கள் வீடியோப் படம் எடுக்கப்பட்டமை தொடர்பாக சட்ட மாஅதிபரை மன்றுக்கு விளக்கமளிக்குமாறு பிரதம நீதியரசர் உத்தரவிட்டிருந்தார்.

இதனையடுத்து முகத்துவாரப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி நேற்று உயர் நீதிமன்றத்தில் பதிலளித்துள்ளார். குற்றச் செயல்கள் மற்றும் போதைப் பொருள் நடவடிக்கைகளை முடக்கும் வகையிலேயே இந்தச் சுற்றிவளைப்புத் தேடுதல் நட்வடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அவர் நீதிமன்றத்திற்குத் தெரிவித்திருந்தார். (ச-5)

## அம்பாறை...

சுற்று நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினர் மீதே கிளைமோர்த் தாக்குதல் நடத்தப்பட்டது.

இதில் சம்பவ இடத்திலேயே படைத் தரப்பைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். காயமடைந்தவர்களில் ஒருவர் காலையிழந்துள்ளார். இருவர் பின்னர் உயிரிழந்துள்ளனர். (ச-5)

## பாதுகாப்பு அனுமதியை...

செல்வதற்குப் படையினரிடம் பயணப் பாதுகாப்பு அனுமதி பெற வேண்டும். அவ் அனுமதி தற்போது 55 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த நடைமுறையானது அடிப்படை மனித உரிமை மீறலாகும். கொழும்பு உட்பட வெளிமாவட்டங்களுக்கு வரும் அனைவரும் 10 படிவங்களுக்கு மேல் பூரணப்படுத்திக் கிராம சேவையாளர், பிரதேச செயலர் ஆகியோரின் கையொப்பங்களுடன் அருகில் உள்ள படை முகாமுக்குச் சென்று பயணப் பாதுகாப்பு அனுமதியைப் பெற வேண்டிய நிலை காணப்படுகின்றது.

இதற்காக அங்குள்ள பொதுமக்கள் ஒரு வாரங்களுக்கு மேலாக ஒவ்வொரு அலுவலகங்களுக்கும் அலைந்து திரிகின்றனர். யாழ். மாவட்டத்திலிருந்து பொதுமக்கள் நியாயமான ஒரு காரணத்திற்காகவே வெளிமாவட்டங்களுக்கு வருகை தருகின்றனர்.

எனவே இந்த நடைமுறையினை நிறுத்தி பொதுமக்களின் அசௌகரியங்களைத் தடுக்குமாறு கேட்டுக் கொள்வதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்ட மேற்படி விடயம் தொடர்பான கடிதத்தின் பிரதிகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.கணேஷ், யாழ்.கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி ஆகியோருக்கு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை. சேனாதிராஜா அனுப்பி வைத்துள்ளார். (ச-5)

## மட்டக்களப்பில் ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதி

மட்டக்களப்புக்கு 2 நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்ட ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதியும் மற்றும் மனிதாபிமான பணிக்கான இணைப்பாளருமான நியூ பொனே மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானப் பணியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து நேரடியாக ஆராய்ந்துள்ளார்.

ஐ.நாவின் முகவர் அமைப்புக்களின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி சபைத் தலைவர்கள் மற்றும் சிவில் அதிகாரிகள் என்று பல்வேறு தரப்பினரைச் சந்தித்து இது பற்றி ஆராய்ந்த அவர், கடந்த ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் இந்த மாவட்டத்தில் காணப்பட்ட சூழ்நிலையுடன் தற்போதைய சூழ்நிலையை ஒப்பிடும் போது தமது பணிக்கு முன்னேற்றகரமானதாகவும் சாதகமானதாகவும் நிலைமைகள் தற்போது இருப்பதாக கூறினார். (ச-5)

## கோரிக்கைகள் நிறைவேறா...

டுக்கவுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

நேற்றுக் காலை கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். 5 ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு கோரி கடந்த 10 ஆம் திகதி அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் நடத்திய வேலை நிறுத்தத்தின் தொடர்ச்சியாகவே மேலும் மூன்று நாள் தொடர் வேலை நிறுத்தப் போராட்டத்தை நடாத்தத் திட்டமிட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் போராட்டத்தை அரசாங்க மற்றும் தனியார் நிறுவனங்கள் இணைந்தே முன்னெடுக்கவுள்ளன. இந்த வேலை நிறுத்தம் எப்போது நடைபெறும் என்பதற்கான திகதி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

இது குறித்து ஏனைய தொழிற்சங்கங்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தப்படவிருப்பதாகவும் தெரிவித்துள்ளார். இந்த வேலை நிறுத்தத்திற்கு முன்னர் இது குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தும் வேலைத் திட்டம் ஒன்று எதிர்வரும் 21 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-5)

## யாழ்.பல்கலைக்கழகப்...

மானியங்கள் ஆணைக்குழு ஊடாக ஜனாதிபதி நியமிப்பது வழமை.

அதனடிப்படையில் புதிய உறுப்பினர்களாக: யாழ்.அரச அதிபர் க.கணேஷ், வாழ்நாள் பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ண ஐயர், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் ஓய்வு பெற்ற அதிபர் எஸ்.சிறிபதி, மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குநர் திருமதி சரோஜா சிவச்சந்திரன், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை ஓய்வு பெற்ற விரிவுரையாளர் திருமதி எஸ். குணபாலசிங்கம், யாழ்.உயர் தொழில்நுட்ப நிறுவன ஓய்வு பெற்ற இயக்குநர் இராஜரட்ணம், சிரேஷ்ட சட்டத்தரணி கே.கேசவன், அருட்திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், சத்திர சிகிச்சை வைத்திய நிபுணர் எஸ்.ரவிராஜ், யாழ்.இந்து கலாசார அலுவல்கள் திணைக்கள ஒருங்கிணைப்பாளர் பொன்.தெய்வேந்திரன்,

செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன், வர்த்தக கைத்தொழில் சங்கத் தலைவர் பி.தியாகராஜா, பொறியிலாளர் இராமதாஸ் ஆகியோரே புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட பேரவை உறுப்பினர்கள் என பலகலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தகவல்கள் தெரிவித்தன.

இவர்களது நியமனம் தொடர்பான அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும் எனவும் அவ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன. (ச-5)

## மனித...

இலங்கை வந்துள்ள பிரித்தானிய வெளியுறவுத்துறை அமைச்சர் அரச மற்றும் எதிர்க் கட்சிகளின் அரசியல்வாதிகளையும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள், சமூக மற்றும் சமயத் தலைவர்களையும் சந்தித்துப் பல்வேறு விடயங்கள் குறித்துப் பேசவுள்ளார்.

இவரது விஜயம் குறித்துக் கருத்து வெளியிட்ட இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம், அமைச்சர் பிறவுண் தனது சந்திப்புக்களின்போது குறிப்பாக இலங்கையில் தற்போது நிலவும் மனித உரிமைகள் நிலைமைகள் குறித்துக் கலந்துரையாட இருப்பதாகவும் மனித உரிமை ஆணைக் குழு அதற்கான ஜனாதிபதி ஆணைக் குழு போன்ற மனித உரிமை மீறல் நிலைமைகளைக் கண்காணித்து வரும் அமைப்புக்களை வலுப்படுத்துதல் போன்ற விடயங்களில் அதிக கவனம் செலுத்த இருப்பதாகவும் தெரிவித்திருக்கின்றது.

புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வென்றினை காணுவதற்கு ஊக்கமளிக்கக் கூடிய அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கு தனது இந்த விஜயத்தினைப் பயன்படுத்தவுள்ள பிரித்தானிய அமைச்சர் பிறவுண், அனைத்துக் கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் வளர்ச்சிப் போக்குக் குறித்தும் அக் குழுவினால் முன்வைக்கப்பட்ட இடைக் கால விதந்துரைகளின் நடை முறைப்படுத்தல்கள் குறித்தும் இலங்கை அரச தலைவர்களுடன் பேச இருப்பதாகவும் பிரித்தானியத் தூதரகம் தெரிவித்திருக்கின்றது.

இதேவேளை இனப்பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான உதவிகளை இலங்கை அரசியல் கட்சிகளுடன் பிறவுண் பகிர்ந்து கொள்ளவுள்ளார்.

அனைத்துக் கட்சிக் குழுவின் நடவடிக்கைகள், இடைக்கால அதிகாரங்களுக்கான பரிந்துரைகள் என்பன தொடர்பாகவும் அவர் அறிந்து கொள்ளவுள்ளார். (ச-5)

மின்பாவனையாளர்களே!

❖கோயில்கள் ❖வீடுகள் ❖வியாபார ஸ்தாபனங்கள்

உங்கள் மின்சார கட்டணத்தை
30% முதல் 60% வரை
குறைக்க வேண்டுமா?

விபரங்களுக்கு :-
Jaffna Technical Institute,
No. 45, Clock Tower Road,
Jaffna.
T.P. - 222 6434.

NEW ASIAN CENTER
(வர்த்தக வங்கி முன்பாக)
No.56/15, Stanly Road,
Jaffna.
077 9254078

(c-1322)

எங்கள் தேவஸ்தானப் பெருந்தலைவர்
அன்னை சிவத்தமிழ்ச்செல்வி
தங்கம்மா அப்பாக்குட்டி J.P.
அவர்களின்
நினைவுப் பிரார்த்தனை வைபவம்



காலம் :- 17.07.2008 வியாழக் கிழமை காலை 9.30 மணி
இடம் :- ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான யாத்திரிகர் விடுதி மண்டபம்.

பேரன்புடையீர் !

வணக்கம்; சிவபதம் எய்திய அன்னையின் திருவுருவப் படம் காலை 9 மணிக்கு அவர்களுடைய 'தாமரை' இல்லத்திலிருந்து ஊர்வலமாகப் புறப்பட்டு துர்க்கை அம்பாள் திருக்கோவில் யாத்திரிகர் விடுதி மண்டபத்தைச் சென்றடையும்.

இதனைத் தொடர்ந்து விசேட பிரார்த்தனையும் மதிய போசன நிகழ்வும் இடம்பெறவுள்ளது. அனைவரையும் இவ் அழைப்பை ஏற்று சமூகந் தந்து சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

இங்ஙனம்
நிர்வாக சபை

(c-1323)

Good Opportunity for You

Flash
1 GB Kingston
2 GB Kingston
4 GB Kingston
8 GB adata

Intel Dual-Core 2.0 Processor,
Asus Motherboard,
1 GB DDR 2, 160GbHard Disk,
DVD R/W
ATX Case with SMPS,
15" CRT Monitor,
Keyboard & Optical Mouse.
UPS

Woofer
microlab 5.1
microlab 2.1
A4 TECH 5.1
INTEX 5.1

RAM
256 DDR 1
512 DDR 1
1 GB DDR 1
256 DDR 2
512 DDR 2
1 GB DDR 2

VGA Card
Asus AGP 128MB,
GeforcePCI EXP 512MB
PC Express 256MB

All Type Casing

Hard Disk
80 GB IDE
120 GB IDE
160 GB Sata

Intex Ups
Personal UPS

WebCam

Printer
1005 hp Laser Jet
Hp DeskJet
Hp DeskJet - All in One

Warranty 1 & 3 Years With Service

குறிப்பு:- [ உங்களுக்காக விடுமுறை நாட்களிலும்!]

திருமுருகன் கொம் நெற்
259 கே.கே.எஸ். வீதி. யாழ்ப்பாணம்.
(ஆல்சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)

மரண அறிவித்தல்

திருமதி
ஜேன் செல்வநாயகி அம்மா தம்பிஐயா



13-07-2008 இல் காலமான திருமதி ஜேன் செல்வநாயகி அம்மா தம்பிஐயா அவர்களின் நல்லடக்க ஆராதனை (17-07-2008) வியாழக்கிழமை உயரப்புலம், ஆனைக்கோட்டையில் காலை 8.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, நல்லடக்கத்திற்காக பருத்தித்துறை மெதடிஸ்த சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உயரப்புலம்
ஆனைக்கோட்டை

தகவல்;
குடும்பத்தினர்

(c-1325)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.1 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.07.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.